
ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருளிய

அருட் சக்தி சட்டச் சதக அந்தாதி



அருள்சக்தி அன்னை பதிப்பகம்
சென்னை - 600 017.

உ

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருளிய

அருட்சக்தி சட்டச் சதக அந்தாதி

இதைச் செப்பஞ்செய்து, பொருளும் எழுதியவர்
சிதம்பரம், ஸாஹித்ய கர்த்தா
ஸ்ரீ V. V. ஸ்வர்ணவெங்கடேச தீக்ஷிதர்
அவர்கள்

வெளியிட்டவர்
கானூர், P. தில்லைக்கோவிந்தப் பிள்ளை
அவர்கள்

முதல் பதிப்பு	:	1957
இரண்டாம் பதிப்பு	:	2004
மூன்றாம் பதிப்பு	:	2008
படிகள்	:	1000
விலை	:	ரூ.30/-

இந்நூல் கிடைக்குமிடம்

அருள்சக்தி அன்னை பதிப்பகம்

30, ராஜாபாதர் தெரு, தி.நகர்,

சென்னை - 600 017.

போன் : 28155649, 28150470, 42124065

எவரெடி அச்சகம்

22 / 15, Dr. சதாசிவம் ரோடு, தி.நகர்,

சென்னை - 600 017.

✆ : 42122271

ஸ்ரீ நடராஜமூர்த்தி துணை

சிதம்பரம், ஸாஹித்ய கர்த்தா

V. V. ஸ்வர்ணவெங்கடேச தீக்ஷிதர் அவர்கள்

எழுதிய

முன்னுரை

அருட்பெருந்திரு. ஸ்ரீ **இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளையும்,** அவர்கள் இறைவனருட்சக்தி துணை வலுவினால் அற்புதமாகச் செய்த சட்டக் கொள்கையின் திறம்பற்றியும் பலரும் அறியக்கூடும் என நம்புகிறேன்.

ஸ்ரீ ஸ்வாமிகள் அமைத்த 'சட்டம்' அரசியல் முதலான சட்டம் போன்றதன்று,

ஏனெனில், அரசியல் சட்டத்தை மீறி நடப்பவர்களுக்குக் கோர்ட்டுகள் மூலம் தக்க தண்டனை ஏற்படுகிறது. ஆயினும், அவர்களின் அறிவு, ஆற்றல், அந்தஸ்து, அன்பு, சாக்ஷி சொல்லும் திறமை முதலிய பல சூழ்நிலையால், கீழே சொல்லிய தண்டனை மேல்கோர்ட்டுக்குப் போனால், குற்றம் நிரூபிக்காத வகையால் தண்டனை தள்ளுபடியாகிறதும் உண்டு.

ஆனால், இந்த ஸ்வாமிகள் செய்த சட்டமோ அது போன்றதன்று இந்தச் சட்டத்தில்சேர்ந்தவர் எவரானாலும், அவர் இச்சட்டத்தை மீறி நடக்கும்போது அதற்குத் தகுந்த தண்டனை அனுபவித்தே தீரவேண்டும். அது மனித சக்தியால் நீக்கமுடியாதது என்று மேற்படி சட்டத்தைச் சேர்ந்த பலர் கண்டும், கேட்டும், அநுபவித்தும் கூறியதை யானும் கேட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தினை மீறிய நபர், தான் செய்த குற்றத்தை மனத்தில் எண்ணி, உடையவரிடம் (இறைவனிடம்) மன்னிப்புக்கோரி, இரந்துருகித் துதித்துத் தியானித்தால், உளமிரங்கி உற்ற துயர்நீக்கி உறுதியோடொழுகும் ஊக்க மனம் தருவார் என்பதும் இச்சட்டத்தின் கருத்து. இதேபோல் நடந்து வருகிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஸ்வாமிகள் பல ஆண்டுகளுக்கு முன், தன்மனதில் தோன்றிய பற்பல எண்ணங்களையும், பலபல இடங்களில் பற்பல அடியார்களின் காதிலும், அன்பர்களின் கருத்திலும் பதியக்கூடிய வகையில் கருத்துள்ள பாக்கள் பல பாடியிருக்கிறார்கள் என்பது அறியத்தெளிந்த உண்மை. மேற்படி பாக்களில், சிற்சில இடங்களில் எதுகை, மோனை முதலியன இடம்பெறவில்லை, காரணம், அறிவாளி வாக்கு இலக்கணத்தையே பிரதானமாகக் கொண்டது. ஆனால் அருளாளி வாக்கோ முக்கிய இடத்தில் கருத்தையே நிலை நிறுத்துவது என்றே உணர்ந்துகொள்ளவேண்டும்.

அப்படி நிகழ்ந்த அந்த ஸந்தர்ப்பங்களில் உடனிருந்து பணியாற்றிய, இப்போது, (முன்னாள் பிரெஞ்ச் எல்லைக்குள்) உள்ள பிள்ளையார்குப்பத்தில் இருக்கின்ற, உயர்திரு. அருட்சக்தி அன்னையாரவர்கள் ஸ்வாமிகளிடம் உத்திரவு பெற்றுப் பலபாக்களை எழுதி, சிறு நோட்டுபுக்குகளில் எழுதி, பத்திரப்படுத்தி வைத்தார்களாம்.

அதுபோல், இன்னும்பல அன்பர்களும், அவ்வப்போது ஸ்வாமிகள் திருவாயிலிருந்து வந்தபாக்களைத் தங்கள்வசமே எழுதிவைத்துக் கொண்டதாகவும், அறியப்படுகிறது. உயர்திரு. அருட்சக்தி அன்னை எழுதிக்கொண்ட பல பாக்களையும், ஸ்வாமிகளிடம் சொல்லிப் புத்தகமாக்க விரும்பியபோது அருட்சக்தி அன்னை அவர்களிடம், "உடையவரும் விரும்பினால் தாய் இஷ்டம் ஈடேறட்டும் அதனை ஒரு நாள் உடையவரே முடிப்பார்" என்று ஸ்வாமிகள் சொன்னார்களாம். அதனை மேற்கொண்டு அந்த வார்த்தையை மீறி நடக்க மனமின்மையால் அச்சிடும் நோக்கம் நிறுத்தப்பட்டது. அதுமுதல் உடையவர் விருப்பம் என்று நமக்குத் தெரிகிறதோ அப்போது புத்தகமாக்கலாம் என எண்ணியே பல ஆண்டுகள் மறைந்தனவாம்.

பிறகு, மேற்படி சட்டத்தில் அதிக நம்பிக்கையோடு சேர்ந்து செயலாற்றிவரும், சிதம்பரம் தாலுக்கா கானூர் **ஸ்ரீ P. தில்லைக்கோவிந்தப் பிள்ளை** அவர்கள் அருட்சக்தி அன்னை அவர்களிடம் அபாரமான பயபக்தி விசுவாசத்துடன்

அடிக்கடி பழகிவரும் காரணத்தினால் அவர்கள் மேற்படி பாக்களை அச்சிடவிரும்பிக் கேட்டுக் கொண்டதற்கு, இது தான் உடையவன் விருப்பம் போலும் என எண்ணி மேற்படி கையெழுத்துப்பிரதியை கானூர் பிள்ளை அவர்களிடம் காட்டி இதில் ஏதாவது ஒருபகுதியை முதலில் சிறுபுத்தகமாக வெளியிடலாம், பிறகு ஸந்தர்ப்பம் நேரும்போது பாக்கியை கவனிக்கலாம் என்று சொன்னார்களாம் அன்னை அவர்கள். திரு. தில்லை கோவிந்தப் பிள்ளை அவர்கள் என்னிடம் மெய்யன்பு கொண்டவர்கள். ஆகையால் என்னைக்கண்டு மேற்படி பாக்களைப் புத்தக ரூபமாகச் செய்வதற்கு எனது உதவியும் தேவை என்றதற்கிணங்கிப் பிள்ளையின் விருப்பப்படி நாங்கள் இருவரும் பிள்ளையார்குப்பம் சென்று அருட்சக்தி அன்னையைக்கண்டு, ஆகவேண்டியதைக் குறித்துப் பேசும்போது, என்னிடம், பல சிறுசிறு கையெழுத்து நோட்டுகளைக் காண்பித்தார்கள் அன்னையார், அவைகளில் என் மனது முதலி ல் இந்நூலையே விரும்பியது. என் விருப்பம் அறிந்த அன்னை அவர்கள் ஸந்தோஷப்பட்டு இதுவும் உடையவர் விருப்பமே என்று சொல்லி என்முன் பிள்ளை அவர்களிடம் மேற்படி பிரதியை எடுத்துக்கொடுத்து, இது அவஸரத்தில் எழுதப்பட்டது. இவைகளில் உள்ளதைப் பரிசீலனைசெய்து இதற்குப் பொருளும் எழுதும்படி என்னிடம் பொறுப்படைத்தார்கள்.

அருள்சக்தி அன்னையார் சொல்லியபடி அவைகளைச் செய்து முடிக்க எனக்கு எந்த விதத்திறமையும் கிடையாது என்பது எனக்கு தெரியும். ஆயினும் இது நடராஜராஜன் செயல் என்றே எண்ணித்துணிந்து இதனைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்டேன். இறைவன் துணையால் இன்று ஒருவாறு புத்தக வடிவாக முடிவும் பெற்றது.

இந்நூலில் பல செய்யுள்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டி, வளம்பெறும் அறிவு புகட்டக்கூடியதாக இருக்கின்றன. சிலசெய்யுள்கள் சைவசித்தாந்தத்தை நிரூபிக்கிறதாக உள்ளன. வேறு சில செய்யுட்கள், மனிதன் பொறாமைக்கும் பொருளாசைக்கும் அடிமையானால் அவன் நல்லவர் உள்ளத்தையும், உடலையும் உற்றார் உறவினரையும்

துன்புறச்செய்து, தீச்செயல்களே செய்து, தான்செய்த வஞ்சக சதிச்செயல்கள் எது ஒன்றும், தான்நினைத்தபடி முடியாது படுதோல்வியுற்று உலகில் உள்ளளவும் நிந்திக்கும் வண்ணம் மதிகெட்டலைந்து மனம் நொந்து, மதிப்பு குறைந்து, எந்த இடத்திலும் எக்காரியத்திலும் முன்வந்து நிற்க முடியாமல் தவித்து தன்னைப்பலரும் வெறுத்து தான் அழிவதுதான் அவனுக்குக் கிடைக்ககூடிய பலன் என்பதை 92-வது செய்யுள் முதல் 94-வது செய்யுள் வரை, பசுமரத்தாணிபோன்ற நிலையில் எவரும் மறுக்க முடியாத வகையில் அழுத்தமாகப் பாடியிருக்கிறார். ஸ்வாமிகள்.

இதைக்குறித்து யோசித்தால் மேற்படி ஸ்வாமிகளைப் பற்றிச்சில விஷமிகளும், பொறமைக்காரர்களும், பலவிதமாக ஸ்வாமிகளுக்கு இழுக்கை உண்டுபண்ண நினைத்தது தெளிவாகிறது. அது குறித்து வெகுளாமல், ஸ்வாமிகள் உடையவரிடம் விண்ணப்பஞ் செய்து தகுந்தபடி தண்டனை, ஸ்வாமிகள் கண்முன்னே கொடுக்கப்பட்டு அதனால் பல அடியார்களும் அன்பர்களும் ஸ்வாமிகளுக்கு இடர் செய்த அறிவிலிகளை இன்னாரென்று அறிந்து, வெறுத்து, நிந்தித்து அஹந்தையை அடக்கியிருப்பார்கள் என்றும் மிகவும் நன்கு தெளிவாகிறது.

குறிப்பாக 94-வது செய்யுளில்

"அலைந்த லைந்தனு தினமும்
அக்கப்போர் ஆயு தத்தால்
கலைத்தெய்வ பக்தி கொண்டோர்
கலங்கிடும் நிலையுண் டாக்கித்
தலையிலே ரட்சை யேற்றுத்
தன்னகம் குன்றி என்றும்
அலைகடல் துரும்பு போலே
அல்லலால் அழிவார் திண்ணம்"

என்று மிகவும் புழுங்கி உண்மையை உலகம் உணர்ந்து நடக்கவே மறைக்காமல் பாடியிருக்கிறார் என்பதும் உணர்ந்து நடக்கத்தக்கது.

சில, செய்யுள்களில், தில்லை நடராஜ மூர்த்தியையே உடையவர் என்ற கருத்தோடு நாடித்துதித்துப் புகழ்ந்து பாடியிருப்பதும் விளங்குகிறது.

மேலும் தில்லை நடராஜர் பேரில் மெய்யன்புப் பெருக்கால் இசைப்பாடலும் பாடியிருக்கிறார். என்பது "வழிகாட்டும் வான் பொருள்" புத்தகத்தைப் படித்துப் பார்த்தோர்க்கு நன்கு தெரியும்.

உடையவர் என்ற சொல்லுக்குப் பிள்ளையார் குப்பத்தில் அருட்சக்தி அன்னை அவர்கள் என்னிடம் பொருள் தெரியுமா என்று கேட்டதற்குச் சுமார் 15 நிமிஷம் என்னிடமிருந்து ச்ருதி, யுக்தி, அநுபவம் இவைகளுக்கு முரணில்லாத பதிலோடு கூடிய பொருளைக்கேட்டு மிகவும் ஆச்சர்யமும், ஆனந்தமும், அடைந்தார்கள். அங்கே உடனிருந்த பல அடியார்களும் அன்பர்களும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

எனக்கு இந்த ஸந்தர்ப்பத்தை அளித்து இப்பணியில் என்னை ஈடுபடுத்தியதற்கு ஸ்ரீலஸ்ரீ அருட்சத்தி அன்னையார் அவர்களுக்கும், கானூர் ஸ்ரீ **P.** தில்லைக்கோவிந்த பிள்ளை அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியுடைமையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு மதிப்புரை எழுதிவழங்கிய எனது அன்பர்கள் திரு.வாசகமணி ஸ்ரீ கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., அவர்கட்கும், வித்வான் ஸ்ரீ **E.S.** வரதராஜய்யர், பி.ஏ., அவர்கட்கும், வித்வான், ஸ்ரீ வை. சுந்தரேசவாண்டையார் அவர்கட்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிவாக, இந்நூலில் இருக்கும் குற்றங்கள் என்னுடையன. குணமிருப்பின் குனித்தபுருவமுடைய குஞ்சிதபாதனின் அருள் செயல் என்றே அன்பர்கள் கொள்ளக்கோருகிறேன். இந்நூலை ஏற்று உலகம் உய்வதாகுக.

இப்படிக்கு

சிதம்பரம் ஸாஹித்யகர்த்தா

02.02.57 **வெ.வை. ஸ்வர்ணவெங்கடேச தீக்ஷிதர்**

உ

சிவமயம்

வித்துவான் **வை. சுந்தரேச வாண்டையார்**
கல்வெட்டு ஆராய்ச்சியாளர்.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

வித்துவான் ஸ்ரீ சுந்தரேச வாண்டையார்

அவர்கள் அன்புடனளித்த

மதிப்புரை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருளிச்செய்த அருட்சக்தி சட்டச்சதக அந்தாதி என்னும் இந்நூலை முற்றிலும் படித்துப் பார்த்தேன். இது நீதிப் பழத்தின் சுவையாய் அமைந்ததன்றிச் சொன்னோக்குப் பொருள் நோக்குத் தொடை நோக்கு நடைநோக்குகளால் சிறந்த செந்தமிழ் இலக்கியமாகவும் அமைந்துள்ளது. அழகெலாம் திகழ்வது. கலைவலார் வியப்பது. ஸ்ரீ சுவாமிகள் அவர்களின் தெள்ளிய உள்ளத்தே திகழ்தருசால்பை உள்ளங்கையில் ஒளிரும் நெல்லிக்கனியெனக் காட்டும் காட்சியின் இயலது. காண்பார் உள்ளங்கனியப் பயில்வார், கடவுட்பற்றிற கனியும் செயலது. இத்தகைய விழுமிய நூலை அருளிய ஸ்ரீ சுவாமிகட்குத் தமிழ்நாடு பெரிதும் கடப்பாடுடையது.

இச்சீரிய நூலை ஆய்ந்து நல்ல முறையில் செப்பஞ் செய்து உதவிய பண்புயர் செம்மலும், தில்லைவாழ் அந்தணப் பெருந்தகையாருமாகிய ஸாஹித்ய கர்த்தா (தமிழ் & வடமொழி) உயர்திரு. V.V. ஸ்வர்ண வெங்கடேச தீக்ஷிதர் அவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

இதை ஒவ்வொருவரும் படித்து இன்புறுதலோடு அதன்படி ஒழுகினால் நல்வாழ்வு எய்தலாம் என்பது என் துணிபு.

சிதம்பரம் இங்ஙனம்

28.01.57 **வை. சுந்தரேச வாண்டையார்**

ஸ்ரீ E.S. வரதராஜய்யர், B.A.,
அவர்கள் அன்புடனளித்த

மதிப்புரை

அருட்சக்தி சட்டசங்கம் தாபித்தவரும் பலதொண்டர்கட்குச் சிறந்த அறிவுரை வழங்கி நல்வழிப்படுத்தி அண்மையிற் சமாதி நிலையடைந்த பெரியாருமான ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகளை அறியாதார் அரியர். தாமின்யுறுவது உலகின்புறக்கண்டு மகிழ்வு கொள்ளும் பெரியார்களில் அவரும் ஒருவராகத் திகழ்ந்தார். அவர்கள் இயற்றியருளிய அருட்சக்தி சட்டச்சதக அந்தாதி என்ற நூல் நன்கு பார்வையிடப்பட்டு இப்பொழுது பலரும் கற்று நல்வழிப்படுதற்காக அச்சிடப் பெற்றுள்ளது. இதை நல்ல முறையில் பரிசோதித்து அச்சிட்டிருப்பவர் தில்லையெம் பெருமான் திருமேனிதீண்டி அர்ச்சனை புரியும் ஸ்ரீ ஸ்வர்ண வெங்கடேச தீக்ஷிதராவர்.

சட்டசங்கத்தின் பல்வேறு கொள்கைகளும் அவற்றைப் பின்பற்றவேண்டிய முறைகளும் முழுநம்பிக்கை வைத்துப் புரியவேண்டிய பலசெயல்களும், நம்பிக்கையின்றி அதிற்சொல்லிய விதிகளைக்கைப்பிடியாது வழுவினோர் அடையக்கூடிய துன்பங்களும் பிறவும் இந்நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இதன்கண் இறைவன் பெருமையும், அவனது அருட்டிறமும், விதியையும் மதியால் வெல்லலாம் என்ற கோட்பாடும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. சட்டத்தை எவரும் கொள்ளலாம் என்றும், சாதிமதவேற்றுமை ஒன்றும் இதில் இல்லை

என்றும், வழிபடும் கடவுளிடத்தில் திடமான நம்பிக்கை வேண்டும் என்றும், பிற தெய்வ நிந்தனை கூடாதென்றும் ஊனுணவையொழிக்க வேண்டும் என்றும், வறியோர்க்கு வழங்க வேண்டும் என்றும் வெள்ளிக்கிழமைதோறும் விரதம் இருக்க வேண்டும் என்றும், இந்த சட்டக்குழுவிலிருந்து சமாதியடைந்தோரை அங்கியிட்டெரித்தல் பாவம் என்றும், நாடோறும் ஆலயந்தொழுவது சாலவும் நன்றென்றும் இந்நூல் வற்புறுத்திக்கூறும். இந்நூலைப்பல அன்பர்களும் பெற்றுச் சட்டசங்கத்தின் உறுப்பினராகச் சேர்ந்து நல்வாழ்வு வாழ்ந்து இறைவன் அருளைப்பெற்று மகிழ்வார்களாக.

இங்ஙனம்

சிதம்பரம்
11.01.57

E.S. வரதராஜய்யர், B.A.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்
தமிழ் விரிவுரையாளர்.

உ

திருவாசகமணி,

ஸ்ரீ கே. எம். பாலசுப்பிரமண்யம், B.A., B.L., அவர்கள்

அன்புடனளித்த

மதிப்புரை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அவர்களால் அருளிச் செய்யப்பெற்ற அருட்சக்தி சட்டச்சதக அந்தாதியைக் கண்ணுற்றுக் கவனமாய்ப் படித்துப் பயனுற்றேன். 'சட்டம்' எனும் புதியதொரு திட்டம் கண்ட தலைவர் இச்சுவாமிகள். அதன் உயரிய தத்துவங்களையும், உறுதி உண்மைகளையும், அச் 'சட்டத்தின்' கர்த்தாவே இந்நூலின் பாடல்கள் மூலம் உலகிற்கு உதவியுள்ளார். வாழ்க்கையின் இரகசியங்களையும் வாழ்வின் இலக்ஷியங்களையும் வளமுற விளக்கும் இப்பாடல்கள் இனிய மொழியும் எளிய நடையும் பொருந்திக் கனியும் சாறும் எனக் கவினுற மிளிர்கின்றன.

இந்நூலாசியர் கருத்துக்களிற் பல என்னுடைய உள்ளத்திற்கினியன; அவை ஏனையோர் பலரையும் இன்புறுத்துவ துறுதி. உதாரணமாக

"கொள்ளலாம் குவல யத்தே
    கோதிலா மனத்தோ ரெல்லாம்
வள்ளலெம் பெருமான் தில்லை
    வான்பொருள் வாஞ்சை யாலே
துள்ளலாம் தெருள்சேர் ஞானத்
    துதியது மூல மாக
உள்ளெலாம் உவகை கூடி
    ஊறெலாம் களைய லாமே" (பாடல் 35)

இவ்வாறு தில்லை வள்ளலை பணியும் பெருமையைக் கூறும் ஆசிரியர் 'சட்டத்தின்' சிறந்த கொள்கைகள் பலவற்றையும் தெள்ளிதின் விளக்குகின்றார்.

சட்டம் வலியுறுத்துவது புலால் மறுத்தல் என்பது தெளிவு. இது சிறந்ததொரு கொள்கையாகும். "சாற்றிடும் உணவில் என்றும் ஜந்துக்கள் நீக்கல் வேண்டும்'' என இக்கொள்கையை 51-வது செய்யுளில் கூறுகின்றார். இதை இன்னும் வலியுறுத்து முகத்தால் ஆசிரியர் மேலும் பாடுகிறார். (பாடல் 52)

"வேண்டுமே கள்வி லக்கல்
 விஷயாதி களைவும் வேண்டும்
காண்டொறும் விஷஜந் துக்கள்
 களைந்திடா திரக்கம் வேண்டும்
வேண்டிடும் வறிஞர் கண்டால்
 விரட்டிடா தீகை வேண்டும்
பூண்டிடும் சட்டந் தன்னுள்
 புரிந்திட விரத முண்டு'' (பாடல் 52)

54-வது செய்யுளில் ஒருவரது உயிர்நீங்கிய உடலைப் புதைத்துச் சமாதி இடவேண்டும் என்று கூறுப்படுகிறது. தண்ணீரில் வாழும் ஜீவகோடிகட்கு ஊறு ஏற்படுமாதலால் அதனை வெந்நீராக்கி அதில் குளித்தல் பாவம் என்கிறார். 57-வது பாடலில் அதேபோன்று வெந்நீர் குடித்தலும் தகாது என்கிறார். ஸ்நானம் செய்தபின் முதலில் வணங்கப் பெறுபவர் விநாயகப் பெருமான் என்கிறது இந்நூலின் 59-வது செய்யுள்.

இந்நூலாசியர் தம்மை "பெண்ணொரு பாகத்தானின் பேரன்பன் புவியில் நானே" என்று (பாடல் 95) வருணித்துக் கொள்வது ஈண்டுக் கருதற்பாலது. மேலும் அவரது 99-வது செய்யுள் மிகச் சிறந்த தத்துவம் ஒன்றை விளக்கி நிற்கிறது.

"முறையது போல நாளும்
முதல்வனைத் துதித்து நின்று
குறையற்று வாழும் மக்கள்
குறிப்பிட அதிலும் உயர்வே
இறைவனால் நன்மை தீமை
இரண்டுமே நிகழ் வதென்று
நிறைமன மெண்ணி வாழும்
நிலைய(து) அதிலும் உயர்வு" (பாடல் 99)

இந்நூலின் 100-வது செய்யுள் இராமலிங்க பெருமானின் இனிய ஜீவகாருண்யக் கொள்கையின் கனியின் சாரத்தைப் பிழிந்து தருகின்றது.

"உயர்விலே தனையு ணர்ந்தே
உதவியே செய்தல் வேண்டும்
அயர்விலே பிறரைக் கண்டால்
அதையொழித் திடுதல் வேண்டும்
துயருறும் உயிரைக் கண்டால்
துயரறச் செய்தல் வேண்டும்
பயமிலா மனதும் வேண்டும்
பசியிலா பக்தி வேண்டும்" (பாடல் 100)

இதேபோன்ற இனிமையும் ஏற்றமும் கொண்டு இலங்குகிறது இந்நூலின் 96-வது பாடல்.

"புவியிலே எவர்க்கும் தீங்கு
புரிந்திடாப் புத்தி வேண்டும்
கவியிலே உயர்ச்சி உண்மை
கண்டிடும் திறமை வேண்டும்
செவியிலே பிறரைப் புகழும்
செய்திகேட் டுணர்தல் வேண்டும்
தவித்திடும் உயிரைக் கண்டு
தான்தேற்றி உதவல் வேண்டும்" (பாடல் 96)

எனவே ஒருகவியின் யாப்பிலக்கணம் ஒரோர்வழி மாறுபடினும் அக்கவியின் உண்மையையும் உயர்வையும் மட்டுமே கண்டு கருதிப் பாராட்டும் மனப்பாங்கு நம்மிடம் இருத்தல் வேண்டும் என்கிறார் சுவாமிகள். இதே அளவு கோலைக்கொண்டு இந்நூலின் சில செய்யுட்களைக் காண்போருக்கு இந்நூல் அருள் செறிந்த உள்ளத்தினின்றும் தோன்றி மலர்ந்த தெருள் சிறந்ததொன்றாகும் என்பது தெளிவாகும்.

இந்நூலைப் பரிசோதித்துப் பண்படுத்தப் பாவுக்கு மெருகேற்றி, உருவமைத்து நாவுக்கும் இன்பமுறப் பாடும் வகை ஆக்கம் செய்த பெரியார் தமிழ்நாடு போற்றும் ஸாகித்யகர்த்தா, சிகாமணி, பிரம்மஸ்ரீ V.V. ஸ்வர்ண வெங்கடேச தீக்ஷிதர் அவர்கள், தமிழ் மொழியிலும் சமஸ்கிருத பாஷையிலும் அமிழ்தெனும் பாடல்களை ஆக்கித் தந்து பேறுபெற்ற அறிஞர் திலகம், அருளின் செல்வர், அஞ்சா நெஞ்சர், அழகொடு, கம்பீரமான தோற்றமுடையவர் அன்பர்க்கு அன்பர், ஆர்வத்தின் சொரூபம், ஆகிய ஸ்ரீஸ்வர்ணவெங்கடேச தீக்ஷிதர் அவர்கள், புவனம் போற்றும் புனிதப்பொதுத் தலைவராகிய ஸ்ரீநடராஜப் பெருமானின் செல்லப்பிள்ளைகளுள் ஒருவர். அவர் இந் நூலைக் கைவரப்பெற்றுத் தம் ஆற்றலையும், பயன்படுத்தி இந்நூலை உருவும் திருவும் சேர்ந்த உணர்வின் நூலாக்கிய செயலும் கூத்தப் பெருமானின் திருவருள் செயலேயாகும், மேற்படியாரே குறிப்பாகப் பொருளும் எழுதியிருப்பது போற்றற்குறியது.

'சட்டம்' என்ற மேற்படி சபையின் அங்கத்தினராயினும் சாதாரணமனிதர்களாயினும், எந்நிலையில் நிற்போரும் இந் நூலைக் கற்பாராகில வாழ்க்கையின் பயனையும் ஆன்மலாபத்தையும் அடைவார்கள் என்பது உறுதி.

முகாம் இங்ஙனம்
சிதம்பரம் திருவாசகமணி
24.01.57

கே. எம். பாலசுப்பிரமண்யம், B.A., B.L.,

உ

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் துணை

"திங்கள் திருப்பணி ஜோதி"

பத்திரிகை ஆசிரியர் - ஆரணி

திரு. V. சுவாமிநாதன் அவர்கள் எழுதிய

பதிப்புரை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அருளிய அருட்சட்டம், பற்றி அவர் வாழ்ந்த காலத்தில் வசித்து வந்த அடியார்கள் மூலமாக **ஸ்ரீ நரசிம்மலு நாயுடு ஸ்வாமிகள்** செய்தி போல் எல்லா விஷயங்களையும் சேகரித்து **1936-ம் ஆண்டு திரு. இராமலிங்கனாரிடம்** அளித்து புத்தகமாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்படி, இருவரும் திருசாத்தனூர் சென்று புரட்டாசி ரேவதி அன்று அருட்கொடி நாட்டுவதற்கு **அருள் சக்தி அன்னையின்** அருள் ஆசி கொண்டு **2-10-1936-ம் தேதி அருட்கொடி நாட்டினார்கள்.** அன்றே அருட்சட்ட அடியார்களை சந்தித்து ஒரு வக்கீல் போல திரு. **கமிஷனர் ஸ்வாமிகள்** குறுக்கு விசாரணை செய்து செய்திகளையும் அருட்பாடல்களையும் திரட்டி **வழிகாட்டும் வான்பொருள்** என்ற புத்தகத்தை **1937-ம் ஆண்டு ஆண்டவர் குருபூஜை தினத்தன்று பிள்ளையார் குப்பத்தில் வெளியிட்டார்கள்.**

ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி அன்னை மூலமாகவே அருட்சட்டம் நன்றாக வளர்ச்சி பெற்று அடியார்களுக்கு தெரியவந்தது. **ஆண்டவர் அருட்சட்டம்** இயற்றியதற்குக் காரணம் மற்றும் **அருட்சட்டத்தின்** முக்கியமான கொள்கை, அதனுடைய முழுப்பலன், எல்லாம் **ஆண்டவர் அருளிய அருள்சக்தி சட்டச்சதக அந்தாதி** பாடல் மூலமாக தெரிவதற்கு முன்னால் திட்டவட்டமாக யாராலும் எதையும் சொல்ல முடியாமல் இருந்தது.

உதாரணமாக இப்போது **ஆண்டவர்** வம்சாவழியில் இருந்து தினசரி பூஜை செய்யும் **திரு. குருநாதன்** அவர்கள், இப்படியெல்லாம் ஆண்டவரா சொன்னார்? என்று பல முறை கேள்வி கேட்டார்கள். திரு. நரசிம்மலு நாயுடு அவர்கள் தன் இஷ்டத்திற்கு எழுதிய புத்தகத்தை படித்து நீங்கள் அதை நம்பி எல்லாம் செய்கிறீர்கள். விடியற்காலை **4.00** மணிக்கு தேவர்கள் ஸ்நானம் செய்கின்ற நேரம் அதனால் மற்றவர்கள் **5.00** மணிக்கு குளிக்க வேண்டும் என்பார். அதை மறுத்துச் சொல்ல யாருக்கும் முடியாததற்குக் காரணம் ஆணித்தரமாக சொல்வதற்கு ஆதாரம் இல்லை. இப்போது கிடைத்திருக்கும் **சட்டச்சதக அந்தாதி** புத்தகத்தில் ஆண்டவர் அருமையாகவும், தெளிவாகவும், விளக்கமாகவும் **100 பாடல்கள்** மூலம் **அருட்சட்டம்** பற்றியும் அதனை முழுமையாக கடைபிடிப்பதால் ஏற்படக்கூடிய பலன்கள் பற்றியும் எளிய நடையில் அர்த்தத்துடன் மிக மிகத் தெளிவாக விளக்கி உள்ளார்கள்.

இந்த ஆண்டு திரு. **K.S.K.** ஸ்வாமிகள் 48 நாள் தவத்தின்போது அதை அடியார்கள் எல்லோரும் சேர்ந்து பாட வேண்டும் என்பது குறிப்பு. அதற்காகவே **மே மாத லட்சார்ச்சனையின்** போது கர்பக்கிரஹ காட்சியும், குகை காட்சியும் காட்டி இந்த பாடலை அரங்கேற்றம் செய்தார் நம் ஆண்டவர். இந்தப் பிரதி கிடைத்தது திரு. **S.S.N. ஸ்வாமியின்** முயற்சியே என்பது பாராட்டத்தக்கது. **ஸ்ரீலஸ்ரீ அருள்சக்தி** அன்னை அவர்கள் சிதம்பரம் கானூர் பிள்ளை மூலமாக **ஸ்ரீ வெங்கடேச தீக்ஷிதர்** பொருள் உரை தந்து எழுதி புத்தகங்கள் வெளியிட காரணமாக இருந்தவர். எனவே அவர்கள் குடும்பத்தார்க்கு அருட்சட்ட அடியார்கள் உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. இதை எல்லா அடியார்களும் வாங்கி தினமும் படித்துப்பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- V. சுவாமிநாதன், T.T.J. ஆசிரியர்

1. ஆண்டவர்க்கும் அடியார்களுக்கும் பாலம் போன்று வைத்திருக்கும் நூல் என்பதால் இந்தப் பாடல்கள் காலை / மாலை பூஜையின் போது பாடவேண்டிய பாடலாக அமைந்துள்ளது.


2. பாக்கெட் சைஸில் போட்டு பாடும் பாடல்கள்போன்றோ, அர்ச்சனை மந்திரம் போன்றோ இதை வெளியிடக் கூடாது.

3. கேந்திரங்களில் ஆழ்நிலை தியானம் முடிந்து பாடவேண்டிய பாடல் இது.

4. இதன் கருத்து மிகப் பிரமாதமாக அமைந்துள்ளதால், எப்போதும், இந்தப் பாடலை பல அடியார்கள் தன்னை மறந்து பாடிக்கொண்டு இருக்கலாம்.

5. **தற்சமயம் சென்னை அருள்சக்தி அன்னை பதிப்பகத்தார்,** சென்னை எவரெடி அச்சகத்தார் மூலம் கணினி அச்சு முறையில் **70 GSM** வெள்ளை தாளில் மறுபதிப்பு செய்து அச்சடித்தார்கள். இது வெளிவர ஒத்துழைத்த எவரெடி அச்சகத்தினர்க்கு அடியார் உலகம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளது.

- V. சுவாமிநாதன், T.T.J. ஆசிரியர்



ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி ஸ்வாமிகள் அவர்கள்
அருளிச் செய்த

அருட்சக்தி சட்டச்சதக அந்தாதி

விநாயகர் காப்பு

**நன்றியே செய்யும் நினைவால் நாவினில் இன்சொல் தோன்றிக்
குன்றுபோல் குணத்தால் செய்யும் குறைவிலாச் செயல்கள் தம்மில்
கன்றியே ஐங்கரத்துக் கஜமுகன் பாதந் தன்னை
ஒன்றியே துதித்துச் சொல்வேன் ஓங்கிடச் சட்டந் தானே.**

பொருள்:- நன்மையே செய்யும்படி நினைக்கும் நினைவினாலே எந்த நிலையிலும் நாவினில் இனிய சொற்களே வெளிப்பட்டு, பின்னும் மலைபோன்ற நிலையான குணங்களோடு அறச்செயல் செய்வதில் விருப்பம் மிகுந்து, சட்டமானது பெருகும்படியாக விநாயகரைத் துதித்துச்சட்ட நீதிகளைச் சொல்வேன்.

உலகெலாம் ஒளிரும் தெய்வம்
குருவிடம் உறையும் உண்மை
பலபல நிலையில் பார்த்துப்
பயன்பெற்றார் உறவும் கூடி
நலமெலாம் அடைந்து நாளும்
நாமெலாம் ஞாலந் தன்னில்
நிலைகுலைந் திடாது வாழ
நெறியதில் நிற்க வேண்டும். (1)

பொருள் :- உலகம் முழுவதும் மறைவாக நிறைந்து விளக்கும்படியான கடவுளானவர் குருவிடத்தில் சிறப்பாகக் குடிகொண்டிருக்கும் உண்மையைப் பலபல நிலைகளில் மனக்கண்ணால் பார்த்து உணர்ந்து அதனால் மிகுந்த பயன்

பெற்றவர்களுடைய தொடர்பைப் பெற்று நன்மையடைந்து உலகத்தில் ஒழுக்க நிலையில் சிறிதும் கெடாதபடி வாழ்வதற்குச் சட்ட நெறியில் சொன்னபடி கடைப்பிடிக்க வேண்டும்.

நிற்கின்ற நிலையி லேயே
நித்தியா னந்தம் காண
நிர்மல நெஞ்சங் கொண்டு
நீணிலத் துறவு சேர
சொர்கத்தின் சுகமும் சேர
சுத்தமெய் யறிவும் சேர
அற்புத காயத் தோடும்
இருந்திட கவனிப் போமே. (2)

பொருள் :- அப்படி சட்ட நெறியில் நிற்கின்ற தன்மையினால் அழியாத பேரின்பத்தை அடைவதற்கும் தீமையல்லாத மனத்தைக் கொண்டு உலகப்பற்றை விடுதற்கும், சுவர்க்க சுகத்தை அடைவதற்கும் மிகவும் தேவையாக உள்ள ஞானத்தையடைய மிகவும் சிறந்த வழியாகவுள்ளதான அற்புத உடம்போடிருந்து கடைப்பிடிக்க வேண்டியவற்றைக் கவனிப்போம்.

கவனிப்போ மென்று நீயும்
கருத்திலே உறுதி கொள்ளு
கவனியா தேயிருந் தால்
கணபதி கருணை காட்டார்
சிவனருள் பெறவே வேண்டின்
சிரத்தையோ டுறுதி கொண்டே
அவரைநீ வணங்கி நின்றால்
அருள் தர நண்ணு வாரே. (3)

பொருள் :- கவனமாகக் கண்பதியை வணங்கு. கருத்திலே உறுதிகொண்டு வணங்கு. சிவனுடைய அருளைப்பெற விரும்பினால் முயற்சியும், உறுதியும், கொண்டு அவரை வணங்கிய வண்ணமே இருந்தால் அருள் தருவதற்கு நம்மை அவர் அணுகுவார்.

நண்ணுவா ரென்று நித்தம்
நம்பியே நினைந்து வந்தால்
மண்ணுளோர் மகிழ்ந்து போற்றும்
மதியுடன் நிதியும் தந்து
விண்ணவர்க் கரிதாம் வேத
மெய்ப்பொருள் தன்னைக் காட்டி
எண்ணுவ தெல்லா மீவார்
இறைஞ்சிடத் தவறி டாதே. (4)

பொருள்:- அருள் தருவதற்கு நம்மையடைவார் என்று தினந்தோறும் நம்பி வணங்கி வந்தால் உலகத்தவர்களால் மகிழப்படுகின்ற சிறந்த அறிவையும், போற்றப்படுகின்ற பெருஞ் செல்வத்தையும் தந்து தேவர்களுக்கு அரியதாகவும், வேதத்தினது மெய்ப் பொருளாகவும் உள்ள மெய்ப்பொருளைக் காட்டி நினைப்பனவற்றை எல்லாம் முடித்து தருவார். வணங்கத் தவறிவிடாதே. (பின்னொரு கால் இம் மனிதப் பிறவி வாய்க்காது).

தவறாதே என்று சொன்ன
சங்கதி உண்மை யாகக்
கவனமாய்க் கருத்திற் கொள்ளு
கனவிலும் கலக்கஞ் சேரா
சுவரிடைச் சித்தி ரம்போல்
சூதுவா துகளை விட்டால்
பவமதை அகற்று மீசன்
பரஞ்சோதி காட்டு வாரே. (5)

பொருள் :- பின்னொருகால் இம்மனிதப்பிறவி வாய்க்காது என்பதை உறுதியாக மனத்துள் கொண்டு எப்பொழுதும் வணங்கி வந்தால் கனவிலுங்கூட கலக்கம் வரமாட்டா. சூதுவாதுகளை விட்டு நல்ல நெறியில் சித்திரம் போல அடக்கமாய் ஒழுகினால் பிறப்பறுக்கும் பெருமான் உனக்குப் பரஞ்சோதி காட்டுவார்.

காட்டுவார் என்ற சொல்லைக்
கேட்டும்நீ கைவிட் டாயேல்
நாட்டுக்குள் ஒருவ ருண்டோ
நலந்தர நமது வாழ்வில்
பூட்டக மான ஜீவன்
ஓட்டமே கொள்ளா முன்னிப்
பாட்டைநீ யுணர்ந்திட் டாயேல்
பலந்தரும் உண்மை யாக. (6)

பொருள்:- சிறந்த ஞான ஒளியைக் காட்டுவார் என்று சொன்னதைக் கேட்டு மனத்துள் கொண்டும் கைவிட்டாயானால் நமது வாழ்வில் நன்மையைச் செய்ய இவ்வுலகில் யாருமில்லை. உடலில் குடியிருக்கும் உயிர் போவதற்கு முன்னதாகவே இந்தப் பாட்டில் சொல்லப் பட்டதை உணர்ந்து ஒழுங்காக நடப்பாயானால் உண்மையாகப் பயன்தரும்.

பலந்தரும் உண்மை என்று
பகர்வதா ரென்று கேட்பின்
நலந்தரும் குருவாய் வந்து
நம்முளே யிருக்கும் வஸ்து
மலந்தனை நீக்கி நம்மை
மனிதர்க ளாகத் தூக்கிப்
பலப்பல விந்தை செய்யப்
பரமனே தோன்ற லுண்டு. (7)

பொருள்:- உண்மையாகப் பயன்தரும் என்று சொல்வது யார் என்று கேட்டால் நன்மை தரும் குருவடிவில் வந்து தோன்றி உரைப்பது நம்முடலினுள் இருக்கும் வஸ்துவேயாகும். மலங்களை நீக்கி நம்மைச் சிறந்த மனிதர்களாக உயரச் செய்யப் பலபல அற்புதங்களைச் செய்யப் பரமனே நலந்தரும் குருவடிவில் தோன்றலும் உண்டு.

உண்டென்று சொன்ன தாரு
  உறுதியாய்ச் செய்வ தாரு
கண்டொன்று சொன்ன தாரு
  கடவுள்கண் டதுயா ரென்னில்
பண்டைநற் பழக்கத் தோடும்
  பண்புளா ரிணக்கத் தோடும்
அண்டுவார் அறிவு காணும்
  அவனுரு வுண்மை தானே. (8)

பொருள்:- குருவடிவில் பரமன் தோன்றலுண்டு என்று சொன்னது யார்? உறுதியாகச் செய்கிறவர் யார்? ஒன்றைக்கண்டு அதன் தன்மையைச் சொன்னவர் யார்? கடந்த பொருளாகிய கடவுளைக் கண்டது யார்? என்றெல்லாம் கேட்டால், பழைமையாகப் பழகி வருகின்ற நல்ல பழக்கங்களோடும், சிறந்த பண்பு நலன்களெல்லாமுடையவர்களுடைய தொடர்போடும், இறைவனை விரும்பி நெருங்குபவர்களுடைய அறிவு, இறைவனுடைய உரு உண்மையைக் காணும். (அஃதாவது இறைவன் உருவத்தோடு விளங்குந் தன்மையை நல்லறிவு காணும்) என்பது.

உண்மைதான் என்று சொன்ன
  ஒலியிலும் அவனே யுள்ளான்
பெண்மையாண் மையிலும் பின்னும்
  பெருகான்மாக் களிலும் உள்ளான்
அண்மையில் இல்லை என்போர்
  அகந்தொறும் மிகவு முள்ளான்
அவனருள் அடையார்க் கிங்கே
  இல்லைநல் இன்ப வாழ்வே (9)

பொருள்:- பெண்மை ஆண்மை, ஆன்மாக்கள் ஆகிய யாவற்றிலும் உள்ளான், அவனுரு உண்மை என்று சொன்ன ஒலி யிலும் அவனே இருக்கின்றான். உருவ வழிபாட்டில் நம்பிக்கை யில்லாத ஒவ்வொருவருடைய நெஞ்சுகளெல்லாவற்றிலும்

நிறைந்திருக்கின்றான். அவனுடைய அருளற்ற எவர்க்கும் இம்மண்ணுலகில் பலர் புகழத்தக்க நல்ல இன்பமான வாழ்வு இல்லை.

வாழ்ந்தெவ ரிருந்தா லென்ன
வகைகெட்டுப் போகும் பட்சம்
தாழ்ந்திட நேரும் சொன்னேன்
தரித்திரத் தொல்லை தீரா
சூழ்நிலைப் பொருள்க ளேதும்
சொந்தத்திற் குதவா தந்தோ
சூட்சுமம் இதைம றுத்தால்
சான்றினோ டுரைசெய் வீரே. (10)

பொருள்:- உயிருடன் வாழ்ந்துகொண்டிருந்தாலும் நல்ல நெறிமுறைகளைக் கடைப்பிடித்து நடவாமலிருந்தால் வாழ்வில் தாழ்ச்சியடைய நேரும். தரித்திரத்தினால் ஏற்படும் துன்பங்கள் தீரமாட்டா. நம்மை வந்தடைந்துள்ள பொருள்களில் சிறிதுகூடக் கடைசி நாளில் உதவி செய்ய முடியாது போய்விடும். உண்மையான செய்தி இதுவேயாகும். இதனை மறுத்தால் சான்று காட்டிச் சொல்லுக. (சான்று காட்டி நிறுவுதல் முடியாது என்பது கருத்து.)

உரைசெய்வீர் என்று சொன்ன
உண்மையை அறிய வேணும்
நரைதிரை மூப்பும் அற்று
நாடெலாம் வாழ வேணும்
கரை படாக் கடலைப் போலக்
கருத்தின்பம் பொங்க வேணும்
சுரைபடர் தன்மை போலச்
சிவத்துதி செய்ய வேணும். (11)

பொருள்:- நரை, திரை, மூப்புகளால் பாதிக்கப்பட்டுத் துன்பத்திலேயே உழலுகின்ற பிறப்பானது நீங்கி நாட்டில்

உள்ளவர்கள் எல்லோரும் பேரின்ப வாழ்வு வாழ வேண்டும். கரைக்கு அடங்கி நில்லாமல் பொங்குகின்ற கடலைப்போலக் கருத்தின்பமானது மிகுதியாக வேண்டும். அப்படிக் கருத்தின்பம் மிகுதியாகி நினைவெல்லாம் சிவன் நினைவாகி, அவரைத் துதிக்கவேண்டும்.

செய்யவே வேணு மென்ற
செய்தியை உணர்ந்து கொண்டும்
ஐயமும் இடரும் கண்டால்
அகமது கலங்கி டாமல்
செய்வதை உறுதி யோடும்
செய்திடில் அவர்க்கு நேரே
தெய்வமே உருவோ டிங்கு
திருவருள் புரியுந் தானே. (12)

பொருள் :- துதிசெய்ய வேண்டுமென்ற செய்தியை உணர்ந்து மனத்திலே உறுதியாகக் கொண்டும், சந்தேகங்களும் துன்பங்களும் நிகழ்ந்த காலங்களிலும் உறுதியாகத் துதிசெய்தும் வருகின்றவர்களுக்குத் தெய்வமானது உலகில் உருவத்துடன் வந்து திருவருளைக் கூடச்செய்யும்

தானேதான் உலகி லுள்ள
சராசரப் பொருளில் எல்லாம்
ஆனேனென் றன்பர்க் கெல்லாம்
அறிவுணர்த்தி யாடுந் தில்லைக்
கோனேதான் கொடுத்து வாங்கும்
குணமுடைக் குருவாய் வந்து
நானேயாய் நிற்கும் சட்டம்
நாட்டுவேன் எங்கும் நானே. (13)

பொருள் :- நானே உலகிலுள்ள சராசரப் பொருள்களில் எல்லாம் நிறைந்திருக்கின்றவன் என்று மெய்யன்பர்க்கெல்லாம் அறிவித்து ஆனந்தத் தாண்டவம் செய்கின்ற தில்லை நடராஜனே

அறிவைக் கொடுத்து அறியாமையைப் போக்கும் குணமுடைய குருவடிவில் வந்து நானேயாகி நிற்கின்றான். நான் சட்டத்தினை எல்லாவிடத்திலும் நிலைபெறச் செய்வேன்.

நானென்று சொன்ன தாரு
நாயகன் ஆவ தாரு
தேனென்று சொல்வ தாரு
தேனினிப் பளிப்ப தாரு
கோனென்று சொல்வ தாரு
கூற்றுவன் ஆவ தாரு
மீனொன்று தடாகம் போலே
மனத்தூய்மை செய்கு வீரே. (14)

பொருள் :- நான் என்று சொன்னது யார்? சிறந்த தலைவனாக இருப்பவன் யார்? தேன் இனிது என்று சொல்லச் செய்வது யார்? தேனில் இனிமையைச் சேர்ப்பது யார்? கோன் என்று மிகவும் மதிக்கப்படுபவன் யார்? உயிருண்ணும் கூற்றுவன் ஆவது யார்? (யாவும், யாரும் தில்லைக்கோனேயாவான்) மனத்தைத் தூய்மை செய்வீர்களாக. (மீன்கள் உள்ள குளத்தில் அழுக்குகள் இருக்க மாட்டா; அதுபோல நல்லறிவினால் மனத்தழுக்கைப் போக்கிச் சுத்தப்படுத்துக.)

செய்குவீர் என்று சொன்னேன்
சித்தத்தில் சிறுமை வேண்டாம்
கைவிரல் அதற் கேற்பச்
செய்யுமா பரணம் போலே
மெய்நிலை யுரத்திற் கேற்ப
விதிவழி விரதம் எண்ணிச்
செய்குவேன் சீவன் முக்தி
எய்திடும் சட்டம் நானே. (15)

பொருள்:- மனத்தைத் தூய்மை செய்யுங்கள் என்று சொன்னேன்; அதனால் சித்தத்தில் சிறுமைகளை

விட்டொழியுங்கள், விரலுக்கேற்ற மோதிரம் செய்வதைப் போல உடலினது வன்மைக்கு ஏற்ப விதிகளின் வழியாகவே விரதங்களை எண்ணி, உயிருடன் வாழ்ந்து கொண்டே முக்தி எய்தும்படியான சட்டத்தை நான் செய்வேன்.

நானஜீ வன்க ளுள்ளும்
நரஜன்மம் அரிதா மன்றோ
ஆனாலும் மனிதத் துன்பம்
அளவிட முடியா தந்தோ
போனாலும் அறிவைக் கொண்டு
பொறையினால் பெரியோ ரெல்லாம்
தானாகிப் புகழ்ப ரக்கத்
தரணியில் வாழ்வார் என்றும். (16)

பொருள் :- சகலவிதமான ஜீவராசிகளுக்குள்ளும் மனிதப்பிறவி கிடைத்தற்கரிது. மனிதப்பிறவி சிறந்ததானாலும் இதன் துன்பங்கள் அளவிடுதற்கரியனவாம். செல்வங்களும், தம்மைச் சூழ்ந்த பொருள்களும் தம்மை விட்டு நீங்கினாலும் இறைவனை வேண்டிப் பெற்ற, மெய்யறிவாலாகும் பயனாலும், சிறந்த பொறுமையாலும், மிகப் பெரியவர்கள் உலகில் நிலைதிரியாமல் எந்நாளும் வாழ்வார்கள்.

என்றென்றும் வாழ்த லென்ப
திலேசான கார்ய மல்ல
சென்றெங்கும் திரிந்து வாடும்
சித்தத்தை நிலைநி றுத்தி
மன்றெங்கும் சென்ற ருள்செய்
வள்ளலாம் கதிர்வீ சும்பொன்
மன்றத்தார டியைத்து தித்தால்
மனநினைப் பெல்லாம் வசமாம் (17)

பொருள் :- எந்நாளும் வாழ்ந்துகொண்டிருப்பது இலேசான கார்யமாகாது. எல்லாவிடத்திலும் சென்று திரிந்து வாடுகின்ற

சித்தத்தைச் சிவன் திருவடிகளிலே நிலையாகப்பதித்து, எல்லாச் சபைகளுக்கும் சென்று (சபையோர்க்கும், பேசுவோர்க்கும், பாடுவோர்க்கும், யாவர்க்கும்) அருள் செய்கின்ற பொன்னம்பலத்திலே நடனமாடுகின்றவனைத் துதித்தால் மனத்தினது நினைவுகளெல்லாம் கைகூடும்.

வசமதாய் ஆன பின்னே
வையமே நமைவி டாது
நிஜமதாய்ச் சுற்றிச் சுற்றி
நிர்மல நினைவு பற்றி
வசைமொழி யொழிந்து நல்லோர்
இசைமொழி நிறைந்து நாளும்
விசையதை யறிந்தோர் பாரில்
விந்தைகள் காண லாமே. (18)

பொருள் :- நினைவெல்லாம் கைகூடுமானால் உலகோர் நம்மை விடாமல் அணுகி நிற்பார்கள். உண்மையாகச் சுற்றிச் சுற்றிக் குற்றமிலாத நினைவினால் (ஒன்றியிருந்து நினைப்பதால்) இறைவன் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு, (அப்படிப் பிடித்துக் கொள்வதால்) பாவிகள் தூற்றும் பழிச் சொற்கள் நீங்க, நல்லோர் போற்றும் புகழ்மொழி நிறையப் பெற்று, எப்பொழுதும் அருட்செயலை உணர்ந்தவர்கள் விந்தையான செயல்களைக் காணலாம்.

காணலா மென்று சொன்ன
கடவுளும் உனக்குள் நின்றால்
தோணவும் பிறரைக் காணோம்
சுகாசுக மிரண்டி னுள்ளும்
காணவே வேண்டு மென்ற
கருத்தது மிகுமோ வென்னில்
தோணவும் பண்ணாற் செய்து
தோத்திரம் பண்ணு வேனே. (19)

பொருள்:- இறைவனுடைய விந்தைகளைக் காணலாம் என்று சொன்ன குருவாகிய கடவுளும் உனது மனத்திற்குள் நிலைத்து நின்றால் சுக துக்கமாகிய இரண்டினுடைய நிலையிலும் தோற்றமுடையவராகப் பிறரைக்காண இயலாது. (அஃதாவது எல்லாம் ஆண்டவர் செயல் என்ற நிலை) கடவுளைக் காண வேண்டுமென்ற கருத்து மிகுதியாகுமோ என்றால், காணவேண்டுமென்ற எண்ணம் தோன்றி அதிகமாகும்படிப் பண்களோடு கூடிய தோத்திரங்கள் பல செய்வேன்.

பண்ணுவே னென்று சொன்ன
 பராபர வஸ்து வெங்கே
நண்ணுவே னென்று சொன்ன
 நற்குரு நாத னெங்கே
மண்ணவர் மறையோ ரென்று
 மறுத்திடும் பேதம் எங்கே
புண்ணிய பாவத் தாலே
 புரிந்துநீ பிடிவி டாதே. (20)

பொருள்:- தோத்திரங்கள் பண்ணுவேன் என்று சொன்ன குருவடிவில் தோன்றிய இறைவனெங்கே? ஆண்டவரை அடைவேன் என்று சொன்ன குருநாதர் எங்கே? மண்ணிலுள்ளவர்கள் அந்தணர்கள் என்று மறுக்கும்படியான பேதம் எங்கே? உனது புண்ணியபாவக் கிரியைகளால் பகுத்தறிந்து அந்த அந்த நிலைகளை உண்ர்ந்து, ஆண்டவர் திருவடிகளை விரும்பி விடாது பிடித்துக்கொண்டு பிறவிக் கடலைக் கடக்க முயல்வாயாக.

விடாதே விட்டி டாதே
விதிவலி தாகி னும்நீ
தொடாதே தொட்டி டாதே
சொன்னசட் டத்தை மீறி
உடாதே உண்டி டாதே
உட்புற மிரண்டி னுக்காட்
படாதே பயப்ப டாதே
பரம்பரன் அருளே தேற்றும். (21)

பொருள் :- மெய்யுணர்வினை விடாதே அதன் பயனை விட்டுவிடாதே. சட்டத்தில் சொல்லப்பட்ட விதிகள் கடினமாயிருந்தாலும் சட்டத்தைக் கைவிடாதே. எந்தவிதமான மாற்றுப் பொருள் செயல்களைத் (மருந்து வகைகள், பரிகாரங்கள்) தொட்டு மேற்கொள்ளாதே. சட்டத்தில் சொல்லப்பட்டவற்றை மீறி ஆடை தரித்தலும், உண்ணுதலும் செய்யாதே. அகப்பற்று, புறப்பற்றுகட்கு (நான், எனது என்பன போன்றன) ஆளாகிவிடாதே. பேரின்பத்தைப் பெறுதற்கு அடைகின்ற துன்பங்கட்கு அஞ்சாதே. யாவற்றிற்கும் யார்க்கும் மேலான பரமனுடைய அருளே நீ உய்வதற்குத் தேவையானவற்றைச் செய்து உதவி செய்யும்

தேற்றுமென் றுறுதி சொன்னேன்
தேறுதல் மொழியென் றெண்ணிச்
சாற்றுநீ சற்று நேரம்
தாழ்த்திப்பின் மறந்தி டாதே
ஊற்றுநீர் ஊறல் போலே
உரைத்தஎன் சொற்கள் நம்பு
சோற்றுக்கும் நூற்கா சுக்கும்
சொன்னதாய் எண்ணி டாதே. (22)

பொருள் :- இறைவன் அருள் தேற்றும் என்று சொன்னேன். இதனை நான் சொன்ன தேறுதல் மொழியாக எண்ணாதே. இதனைக் கேட்டுச் சிறிதுநேரம் கழித்து மறந்துவிடாதே. ஊற்றுநீர் ஊறுதல்போல நான் இனிமையாகச் சொன்ன உறுதிதரும்

சொற்களை நம்பி கடைப்பிடிப்பாயாக சோற்றுக்கும் புத்தக வெளியீட்டால் செல்வத்தை அடைவதற்கும் சொன்னதாக அற்ப நினைவு கொள்ளாதே.

எண்ணிடா திறங்கிப் பின்னே
எண்ணுவ திழுக்கா மந்தோ
நண்ணிடார் நட்பு கோரும்
நடைநகை யாவ தைப்போல்
பண்ணிடாப் புத்தி கொண்டு
பார்த்தன்பு செய்தல் நன்மை
கண்ணிடைக் கருத்தோ டொன்றிக்
கள்ளம் விட்டே இருநீ. (23)

பொருள்:- எந்த காரியத்தையும் முதலில் எண்ணாது காரியத்தில் இறங்கிப் பின்னால் எண்ணுவது முட்டுப் பாட்டைத் தரும். பகைவர் "நாங்கள் நட்பாய் இருக்கின்றோம்." என்று சொல்லும் சொல், எப்படி நகைக்கத் தக்கதாக இருக்கிறதோ, அதுபோலச் செய்யாத நல்ல புத்தியினால் ஆராய்ந்து பார்த்து நட்பு கொள்ளுதல் நன்மையைத் தரும். அப்படி நட்பு கொண்டவரிடத்தில் அவர் கருத்தோடு ஒருமித்துக் கள்ளத் தன்மையை விட்டு வாழ்வாயாக.

இருப்பாய்நீ என்று சொல்வ
தென்குரு ஆணை தானே
அருளென்ன பொருளு மென்ன
ஆனந்த மாவ தென்ன
திருவென்ன அறிவு மென்ன
சித்தத்தில் இருப்ப தென்ன
பொருளுண்மை யுணர்ந்தோர் பாடும்
பெரும்பற்றப் புலியூர் கோவே. (24)

பொருள் :- கள்ளம் விட்டு வாழ்வாய் என்று சொல்வது என் குருநாதனுடைய ஆணையாகும். அருளாவது என்ன? பொருளாவது என்ன? ஆனந்தமாவது என்ன? முத்தியாவது

என்ன? அறிவாவது என்ன? சித்தத்தில் இருப்பதாகிய பொருள் என்ன? இவையெல்லாம் ஆகியிருக்கின்றவன், பொருள் உண்மை உணர்ந்தவர்களாற் பாடப்படுகின்ற தில்லை நடராஜனே யாவான்.

கோவேயென் உள்ளத் துள்ளே
குடிகொண்ட சக்தி யன்றோ
தேவேயெவ் வுலகத் துந்தான்
நிறைந்திடும் சக்தி ஒன்றாம்
பாவேயிவ் வுயிரை யெல்லாம்
பற்றும்மெய்ச் சக்தி கண்டாய்
நாவேநாம் கடவுள் காண
நல்வழி காட்டும் காட்டும் (25)

பொருள்:- பெரும்பற்றப் புலியூர் கோவே (தில்லை நடராஜனே) என்னுள்ளத்தில் சக்தியாக விளங்குகின்றான். ஒவ்வொன்றிலும் குடிகொண்டிருக்கும் அவனே உலகெங்கிலும் நிறைந்திருக்கின்ற சக்தியும் ஆவான். அத்தகைய இறைவனைப் பற்றிய பாடலே உலகுயிர் அனைத்தையும் ஈர்க்கும்படியான சக்தியுடையதாகும். நாம் கடவுளைக் காண்பதற்கு நல்வழியை நாவே காட்டும் (இது உறுதி).

காட்டுமென் றுறுதி சொன்னேன்
கடவுளே உண்மை யாக
வீட்டையும் சேரத் தக்க
மெய்த்துணை காட்ட வேண்டும்
சேட்டையில் லாமல் நீயே
சிறுமையைக் களைந்தெ றிந்து
நாட்டமா யிருந்தா யானால்
நாடிவந் தருள ளிப்பான். (26)

பொருள் :- நல்வழியைக் காட்டும் என்று உறுதி சொன்னேன் கடவுளே உண்மையாக வீட்டையும் சேரும் படியாக உண்மையான துணையைச் செய்யவேண்டும் மனித சேட்டைகளைவிட்டு

சிறுமைக்குணச் செயல்களை வேரறக் களைந்தெரிந்து பெரும் விருப்பத்துடன் இருந்தால் இறைவனே நம்மை அடைந்து அருள் தருவான்.

அளிப்பவன் அவனே எல்லாம்
அழியாமற் காப்பான் அவனே
அழிப்பவன் அவனே எங்கும்
அடர்ந்திருப் பவனும் அவனே.
களிப்பவன் அவனே யார்க்கும்
கருதிடில் வீயா இன்பம்
அளிப்பவன் அவனே சிவனாம்
அறிந்துநாம் போற்று வோமே. (27)

பொருள் :- அருள்கூர்ந்து எல்லாவற்றையும் படைப்பவன் அவனே. அப்படிப் படைத்தன யாவற்றையும் துன்புறாமல் காப்பவனும் அவனே. பின் யாவற்றையும் அழித்து மறைக்கின்றவனும் அவனே. எல்லாவிடங்களிலும் நிறைந்திருப்பவனும் (வியாபித்திருப்பவனும்) அவனே. கீதம் கேட்டு ஆனந்தங் கொள்பவனும் அவனே. யாவருக்கும் அழியாத பேரின்பம் தருபவனும் அவனே. அவனே சிவன். அவனது அருளாரமுதப் பெருங்கடலை அடைந்து அவனை யறிந்து நாம் அவனைப் போற்றுவோம்.

போற்றிநாம் கேட்டோ மானால்
பொருளுடன் அருளும் தருவான்
சாற்றிடும் வகையும் சொல்வான்
சமத்துவ நிலையுந் தருவான்
தேற்றியே வகைப்ப டுத்தித்
தெளிவதிற் றெளிவ தாக்கித்
தோற்றத்தில் புதுமை தூக்கிச்
சித்சுகந் தருவா னன்றோ. (28)

பொருள்:- சிவனைப் போற்றி விண்ணப்பித்தால் இவ்வுலகத்திற்குச் சிறந்த பொருளையும், அவ்வுலகத்திற்குச் சிறந்த

அருளையும் தருவான். துதிசெய்யும் வகைகளையும் சொல்லாமற் சொல்வான். சரலோக பதத்தையும் தருவான். (மற்றொரு பொருள்:- யாவரிடத்தும் சமமான நினைவு, சொல் செயல்களை நிகழ்த்தும் தன்மையைத் தருவான்) நம்மறிவையும் நம்மையும் தேற்றமடையச் செய்து வகைப்படுத்தி நல்ல தெளிவையுமுண்டாக்கித் தோற்றத்தில் புதுமையை அதிகமாகச் செய்து ஞானமயமான சுகத்தைத் தருவான்.

தருவதை அறிந்து சொன்னேன்
சற்குரு பாதம் போற்றி
ஒருமையோ டொன்றிக் கேட்டால்
உயர்வினைத் தருவான் கேளு
வருவதை யறிந்து கொள்ளு
வருத்தமும் வேண்டா மப்பா
பரிவுடன் இதைநீ நம்பு
பாலனே சோர்வு வேண்டாம் (29)

பொருள் :- சித்சுகம் தரும் தன்மையை அறிந்து சொன்னேன் சற்குருநாதருடைய திருப்பாதங்களைப் போற்றி ஒருமைப்பட்ட உள்ளத்தோடு பொருந்திக் கேட்டால் உயர்வைத் தருவான். மேல் வருதற்காக இருக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து அவைகளை முடிக்கவும் தவிர்க்கவும் ஏற்ற உபாயங்களை இறைவனருளால் கைக்கொள்வாயாக, வருந்தாதே. அன்புடன் இந்த மொழிகளை நம்பு. சோர்வு கொள்ளாதே.

வேண்டா மெனில்வி டாது
வேண்டுமென் றால்வ ராது
மாண்டார்போல் இருந்தா லும்முன்
வாசனை யுனைவி டாது
ஆண்டானும் அடிமை யும்போல்
அனைத்திலும் ஏற்றத் தாழ்வு
பூண்டாலும் பொறுமை தானே
பூரணம தாய்நில் லாது. (30)

பொருள் :- வருவனவாகிய நன்மை தீமைகளை அடையவேண்டாம் என்று விலக்கினாலும் விட்டு நீங்கா. அவைகள் வேண்டுமென்று விரும்பினாலும் வந்தடையா, உலகப் பற்றை விட்டவர்போல அல்லது இறந்தவர் போல, (அஃதாவது யாவற்றினுடைய சுக துக்கத்தையும் கடந்தவர்போல் என்பது) இருந்தாலும் உன்னுடைய முன் தொடர்பான செயல்கள் உன்னைவிட்டு நீங்கா, ஆட்கொண்டவனும் ஆட்பட்டவனாகிய அடிமையும்போல எல்லாவற்றிலும் பிறர்க்கு உயர்வும் தனக்குத் தாழ்வும் பூண்டிருந்தாலும் பொறுமையானது காரியம் முடிவடையும் அளவும் நிலைத்து ஒரு தன்மையாய் நிற்காது.

நில்லாதென் றாலும் நீயே
நித்தமும் பழகி வந்தால்
அல்லாதெந் நாளு மிங்கே
அதுநிலைத் தல்மிக அரிது
செல்லாதென் றாலும் அதுவே
செலுத்துவார் செயல தாலே
புல்லறி வின்செயல் நீங்கிப்
பேரின்பம் சூழு மன்றோ. (31)

பொருள் :- பொறுமையானது பூரணமாக நிலைத்து நில்லாது என்றாலும் நிதமும் பழகிவந்தாலல்லாமல் பொறுமை உலகத்தில் நிலைப்பது கடினமாகும். காரியம் சரிவர நடக்காது என்று தெரிந்தாலும் அக்காரியத்தை நடத்துபவரின் தெய்வ நம்பிக்கையோடு சேர்ந்த முயற்சியினாலும், அற்பமான அறிவுடையவரால் ஏற்படும் இடையூறுகளை இறைவன் அருள் துணையாலும், நீங்கிப் பேரின்பம் அடைவார்கள்.

சூழ்ந்திடும் இன்பத் தாலே
சுயநிலை மறந்தோ ரெல்லாம்
வாழ்ந்திடத் தகுதி யற்றும்
வகைகெட்டும் வசைக்காட் பட்டும்
ஆழ்ந்துவெந் துயர தாலே
அகமது நொந்து வீணே
தாழ்ந்துகுற் றேவல் செய்து
தரணியில் அலைகின் றாரே. (32)

பொருள்:- தம்மை வந்தடைந்த இன்பத்தினாலே சுயநிலைமையை மறந்தவர் யாவரும் வாழ்க்கை நடத்தும் தகுதி இல்லாமலும், மானம், வாய்மை, முதலியன இல்லாத காரணத்தால் பிறர் பழித்தற்குரிய ஆளாகியும், பழிக்கடலிலே மூழ்கிக் கொடிய துயரத்தால் மனம் புண்பட்டு வருந்தியும், வீணே பிறருக்குத் தாழ்வாகக் குற்றேவல் செய்து உலகில் பலனில்லாமல் அலைகின்றார்கள்.

அலைகின்ற பேரைக் கண்டும்
அறிவுவந் திடாது போயின்
விலைப்பண்டம் வாங்கல் போல
விலைகொள்ள முடியா தந்தோ
தலைவிதி யென்றா லுந்தன்
தண்மதி யாலோ சித்தால்
நிலைகுலைந் திடாத வாறு
நிச்சயம் வாழ லாமே. (33)

பொருள் :- நிலைகெட்டு அலைகின்ற பேரைக்கண்டும் நல்ல மெய்யறிவு வராமல் போகுமானால் பண்டங்களை விலை கொடுத்து வாங்குதல்போல விலை கொடுத்து மெய்யறிவினைப் பெறமுடியாது. (அந்தோ !) தலையில் எழுதிய விதிப்படி நடக்கிறது என்றாலும் குளிர்ந்த மனநிலையோடு கூடிய புத்தியினால் ஆராய்ந்து பார்த்து நடந்தால் நிலைகெடாமல் நிச்சயம் வாழலாம்.

வாழலாம் வகையோ டென்றும்
வாழ்த்தலாம் வழிதெ ரிந்தால்
சூழலாம் ஸன்மார்க் கத்தில்
சூக்ஷுமம் அறிந்தால் பின்னே
ஊழெலாம் அகன்றே யீசன்
உண்மையாம் இன்பக் கடலில்
வீழலாம் விழுந்துட் சென்று
விலையிலா மணியைக் கொளலாம். (34)

பொருள் :- இறைவனது அருட்டுணையால் ஆராய்ந்து பார்த்து நடந்தால் வகையோடு என்றும் வாழலாம். இறைவனை வாழ்த்த வழிதெரிந்தால் வாழ்த்துதலும் செய்யலாம். சன்மார்க்கத்தை அடையலாம். சூக்ஷுமத்தைத் தெரிந்துகொண்ட பின்னர் ஊழ்வினைகள் அகன்று ஈசனுடைய மெய்யின்பமாகிய பேரின்பக் கடலில் வீழ்ந்து உள்ளேசென்று விலையிலாத மணியாகிய இறைவனைப் பெறலாம்.

கொள்ளலாம் குவல யத்தே
கோதிலா மனத்தோ ரெல்லாம்
வள்ளலெம் பெருமான் தில்லை
வான்பொருள் வாஞ்சை யாலே
துள்ளலாம் தெருள்சேர் ஞானத்
துதியது மூல மாக
உள்ளெலாம் உவகை கூடி
ஊறெலாம் களைய லாமே. (35)

பொருள் :- உலகத்தில் கோதில்லாத மனத்தோரெல்லாம் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈபவனாகியதில்லையில் உள்ள அருளமுதமயமானவனிடத்தில் கொண்ட மெய்யன்பின் காரணமாக ஞானத்தைப் பெற்றுத் துள்ளலாம். தெளிவு மிகவுடைய ஞானத்துதி மூலமாக மனமெல்லாம் மகிழ்ந்து இடைறுயூகளைப் போக்கலாம்.

களையலாம் துயர்க ளெல்லாம்
கனவிலும் தமைச்சா ராமல்
களைப்பிலாக் கருத்தி னாலே
காசினி மீதில் என்றும்
அளப்பிலா தவன்சீர் பாடி
அனுக்கிரகம் பெற்றோ ரிங்கே
பிளப்பிலாப் பேரின் பத்தில்
பிறரையும் சேர்க்க லாமே. (36)

பொருள் :- துன்பங்கள் எல்லாம் கனவிலுங்கூடத் தம்மைச் சேராமல் போக்கலாம். சலியாத கருத்தினால் (அதிகமான மன எழுச்சியினால்) என்றும் யாராலும் அளந்தறிய முடியாதவனாகிய இறைவனுடைய சீரினைப் பாடி அவனுடைய அருளாசியை (அனுக்கிரகம்) துணையாகக் கொண்டவர் இவ்வுலகத்திலும்கூட பிறவாமல் பிரிக்க முடியாத பேரின்பத்தில் தாம் சேர்வதோடல்லாமல் பிறரையும் சேர்க்கலாம்.

சேர்க்கலாம் சிந்தை யுள்ளே
செம்மையாம் திறமுண் டென்னில்
பார்க்கலாம் பிறர்கா ணாத
பரப்பிரம்ம வஸ்து வைநாம்
ஏற்கலாம் இடைவி டாமல்
இணைந்திடும் இமைகண் போலே
ஊர்க்குளே இருப்போர் காண
உலகமும் கேட்கும் வண்ணம் (37)

பொருள் :- மனத்தில், மெய்யன்பு, வாய்மை, உறுதி என்பனவாகிய நல்ல பலம் இருக்குமானால் பிறர்காணாத பரப்பிரம்மத்தை நாம் பார்க்கலாம். பார்த்து, அவனுடைய அருள் துணையைப் பெறலாம். ஊருக்குள் இருப்பவர்கள் நேரே காணவும், உலகத்தவர் கேட்கும் வண்ணம்.

வண்ணமா மேனி கொண்டும்
வகைவகை யணிகள் கொண்டும்
கண்களைக் கவரச் செய்யக்
கணமொரு ஆடை கொண்டும்
தண்மைசேர் உரையாற் றேர்ந்த
தகுதிகொள் பேச்சி ருந்தும்
உண்மைஒன் றில்லார் காண
உடையவர் இல்லை எங்கும் (38)

பொருள் :- மிக அழகியதாயும் நிற முடையதாயும் பெரியதாயும் உள்ள உடலைக்கொண்டிருந்தாலும் வகைவகையான ஆபரணங்களைக் கொண்டிருந்தும், பிறர் கண்களைக் கவர்வதற்கு க்ஷணத்திற்கு க்ஷணம் ஒவ்வொரு ஆடை ஆடம்பரமாக உடுத்திக்கொண்டிருந்தும் உண்மையாகிய சிறந்த பொருள் ஒன்றுமட்டும் இல்லாத வஞ்சக மனமுடையவர்கள் பார்ப்பதற்கு இறைவன் அவர்கள் கண் முன்னர் எங்கும் எந்த நிலையிலும் காட்சியளித்தலில்லை.

அங்குளான் என்னும் சொல்லும்
இங்குளான் என்னுஞ் சொல்லும்
எங்குமே உளனென் சொல்லும்
இயற்கையில் மிகவும் உண்மை
எங்கெங்கே யில்லை என்னும்
எண்ணமுண் டோவங் கங்கு
கங்கைசேர் சடையெம் பெம்மான்
கருத்தொக்க நடிக்கின் றாரே. (39)

பொருள் :- அங்குள்ளான் இங்குள்ளான் எல்லாவிடத்திலும் உள்ளான் என்று பலவிதமாகச் சொல்லும் சொற்களெல்லாம் இயற்கையில் மிகவும் உண்மையேயாகும். எங்கெங்கு இல்லையென்ற கருத்திருக்கிறதோ அங்கங்கு கங்கையினையுடைய சடையையுடைய சிவபெருமான் அவ்வவ்விடத்தோர் கருத்திற்குப் பொருந்த அங்கங்கு அவ்விழி தகையோர்க்கு இல்லையெனத்

தோற்றுகின்றான். தெய்வமுளதென்று நம்பும் தெருள்ஞான மெய்யன்பர்க்குத் திக்கெல்லாம் ஆகித் திகழ்பவனாயிருக்கின்றான். (என்பது)

நடிக்கின்றான் நடிப்புக் கண்டும்
ஞானமே பெற்றோ மில்லை
அடிக்கின்றான் உடுக்கை ஒன்றும்
அதனுண்மை அறிந்தோ மில்லை
வடிக்கின்றோம் வஞ்சக் கண்ணீர்
வையமே வேண்டு மென்று
துடிக்கின்றோம் தூண்டிற் புழுவாய்
முடிவிலாத் துயர தாலே. (40)

பொருள் :- (உளதென்பார்க்கு உளனாகியும் இல்லை யென்னும் இழிந்தவர்க்கு இல்லையாகவும் தோன்றி நடித்தும்) பஞ்ச கிருத்திய பரமானந்த நடனம் புரிந்தும் அறிவு புகட்டும் நிலையைக் கண்டும் மெய்ஞ்ஞானம் பெறவில்லை உடுக்கை ஒன்றினை ஒலிக்கின்றான். அதனுண்மையை அறியவில்லை. வையகமே வேண்டுமென்று வஞ்சக்கண்ணீர் சிந்துகின்றோம். அளவு கடந்த துன்பத்தின் தாக்குதலால் தூண்டிலிற் கோத்த புழுப்போலத் துடிக்கின்றோம்.

துயரது பலவாம் கேளு
துகட்செய் யும்மிடிச் சிறுமை
துயர்களின் தாய்தந் தைகாண்
திறமது கூறு கின்றேன்
புயமதின் வலியும் நல்ல
பெரும்பொருள் நலமும் கொண்டோர்
நயந்துநல் அறஞ்செய் யாரேல்
நாடிடும் வறுமை பின்னே. (41)

பொருள் :- துன்பங்கள் பலவாகும். பல குற்றங்களையும் செய்விக்கும் வறுமையும் சிறுமையும் (தாழ்வும்) துன்பங்களுக்குத்

தாயும் தந்தையுமாகும். உடல் வளமும் பொருட் செல்வமும் உடையவர்கள் உள்ளன்போடு விரும்பி நல்ல அறத்தைச் செய்யாது வேறு வழிகளில் ஒழிப்பரேயானால் அவ்வாறு நடக்கும் நிலைக்குப் பின்னாகவே வறுமையானது அவரைப்பின்பற்றி அடையும்.

வறுமையாற் பாபஞ் செய்வார்
விளம்பொணா நரகம் சேர்வார்
வகைவகை சிட்சை யாற்பின்
விட்டிடாச் சென்மம் பற்றி
வறிஞராய்த் தோன்றிப் பின்பும்
வரையிலாப் பாபி யாகி
அறிஞர்கள் அறிந்து தேற
அவனியில் அலைவார் என்றும் (42)

பொருள் :- வறுமை காரணமாகப் பாபங்கள் செய்கிறவர், சொல்லுவதற்கே அச்சம் தரும் நரகத்தைச் சேர்வர். பல வேறு விதமான தண்டனைகளாலே பின்னும் வறிஞராய்ப் பிறந்து பிராயச்சித்தமில்லாத பாவங்களை உடையவராகி அவரைக் கண்டு அறிவுடையவர்கள், நன்மை தீமை, புண்ணிய பாவம் யாவற்றையும் அறிந்து தெளிவுபெற்று நன்மையடையும்படியாக உலகத்தில் அலைவார்கள்.

என்றுமே எவரும் இந்த
இயற்கையின் தத்து வத்தை
ஒன்றியே உணர்ந்தா ரானால்
உளமது உயர்வ தாகும்
நன்றியே செய்யத் தக்க
நாட்டமும் ஊட்ட மாகும்
குன்றதே போல நல்ல
குணமது நிலைய தாகும். (43)

பொருள் :- எந்தநாளும் இந்த இயற்கையின் தத்துவத்தை ஏகமனதாக உணர்ந்து தெளிவார்களானால் (உள்ளத்தின்

நிலையானது) முயற்சியானது அதிகமாகும். அம்முயற்சியினாலே சத்காரியங்களையே செய்யத் தூண்டும் கருத்தும் உண்டாகும். சிறந்த குண நலன்களெல்லாம் மலைபோலப் பெருகி நிலைத்து நிற்கும்.

நிலையதாய் நானி லத்தோர்
நவிலிம்மை இன்பம் வேண்டின்
கலைவடி வீசன் கொள்கைக்
கருத்திலே யுறுதி வேண்டும்
நிலைகெட்ட செயலால் வாழ்க்கை
நலிந்தழி தீயோர்க் காளாய்
அலைந்துபே ராசை யாலே
அழிந்திடாச் செயலும் வேண்டும். (44)

பொருள் :- நிலையாக உலகத்தவர் இம்மையின்பத்தினை வேண்டுவாரேயானால் கலைகளை வடிவாகவுடைய இறைவனைக் கருத்திலே உறுதியாகக் கொள்ளும்படியான மேலான நிலை வேண்டும். நன்னிலைமை கெட்ட செயலால் வாழ்க்கையிலே வருந்தி அழிகின்ற பேர்களுக்கு அடிமை ஆளாய் அலைந்து பேராசையால் அழியாத செயலும் வேண்டும்.

வேண்டிடில் மறுமைப் பேறு
விரும்பியே பிறப்பை யெல்லாம்
காண்டொறும் தமது சுற்றக்
கருத்துடன் கருத்தாற் றேற்றி
நீண்டிடும் பிறவி யில்லா
நெறிமுறை நடையி லேற்றிப்
பாண்டவர் சகாயன் போலே
பாரினில் இருக்க லாமே. (45)

பொருள் :- மறுமைப் பேறு விரும்பினால் விருப்பத்தோடு உலகத்துப் பிறப்பையெல்லாம் காணுந்தோறும் அவைகள் தமது சுற்றம் என்று கருதிக்கொள்ளும் சிறந்தகருத்தினால் தேற்றமடையச்செய்து பல பிறவியை இல்லாத நிலையை

யுண்டாக்கும், நல்ல நெறிமுறைகளை உலகநடையில் ஏற்றி (மக்கட்குக் கூறி அவர் அவ்வாறு நடக்கத் தூண்டி) உதவி புரிந்து பாண்டவர் சகாயனான கண்ணனைப் போலச் சிறப்புற்று உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கலாம்.

இருக்கலாம் சமய மெல்லாம்
  இயற்றுதற் கரிதாம் கொள்கைக்
கருத்துவெவ் வேற தாலே
  கலகமே உலகில் சூழும்
விருத்தமே யில்லாச் சமயம்
  பொருந்திடும் கொள்கைக் கேற்பக்
கருத்தினில் கடவுள் எண்ணிக்
  கடைப்பிடி சட்டங் கொண்டு (46)

பொருள் :- சமயங்களெல்லாம் இருக்கலாம். ஒவ்வொன்றிலும் இயற்றுதற்கருமையான கொள்கை, கருத்து வேறுவேறாக இருக்கின்ற காரணத்தால் உலகத்தில் கலகமே ஆகும். (ஆதலால்) வேறுபாடில்லாத சமயத்திற்குப் பொருந்திய கொள்கைக்கு ஏற்பக் கருத்தினிலே உறுதியாகக் கடவுளை எண்ணிச் சட்டத்தைக் கைக்கொண்டு நெறியைக் கடைப்பிடிப்பாயாக.

சட்டம தென்ன என்று
  சகத்துளோர் அறியச் சொல்வேன்
இட்டமாய் இதில்சேர்ந் தோர்கள்
  சட்டத்தில் நடப்பு காட்டி
கஷ்டத்தோ டுறுதி யில்லா
  நஷ்டத்தை அடையும் போதில்
சட்டத்தை மீறும் பட்சம்
  சத்தியம் சிட்சை செய்யும் (47)

பொருள் :- சட்டமென்பது என்ன என்று உலகத்தவர் அறியச் சொல்லுகின்றேன். சம்மதித்து இச்சட்டத்தில் சேர்ந்தவர்கள் சட்டத்தில் நடப்பவர்கள் போலக்காட்டி வாழ்க்கையில் துன்பமும், உறுதியில்லாத நிலையும், வரும் படியான எந்தவிதமான

நஷ்டத்தையும் அடைகின்றபொழுதில் இந்த சட்டத்தை மீறும் நிலையில் அவரைச் சத்தியமே தண்டிக்கும் (இது உறுதி.)

சாதிமத பேதம் இல்லை
சட்டத்தை எவரும் கொளலாம்
பூதல வாசி யெல்லாம்
போற்றிடும் பெருமை பெறலாம்
சூதில்லை சூழ்ச்சி யில்லை
சூத்திரப் புறம்பு மில்லை
வாதில்லை வயது மில்லை
வாஞ்சையொன் றதுவே போதும். (48)

பொருள் :- சாதி மத வித்யாசமில்லை. சட்டத்தை யாவரும் கொள்ளலாம். உலகத்தவரால் போற்றப்படும் பெருமையை அடையலாம். சூது சூழ்ச்சி யாதும் இல்லை. நன்னூல்களுக்கு புறம்பான நடைமுறையுமில்லை, வாதில்லை, இன்ன வயதினர்தான் சட்டத்தைக் கொள்ளவேண்டுமென்ப தில்லை, மெய்யன்பு ஒன்றே போதுமானது. (யாரும் சட்டத்தினை அனுஷ்டிக்கலாம்).

போதுமென் றேன்ஆ னாலும்
புண்ணிய வசத்தா லன்றி
மாதரும் மற்றெல் லாரும்
விரும்பியிச் சட்டம் சேரார்
பூதலம் வியக்கும் இந்த
புன்மையில் சட்டந் தன்னில்
காதலாற் கலந்தோர் எல்லாம்
கடைப்பிடி நெறியைச் சொல்வேன் (49)

பொருள் :- மெய்யன்பு ஒன்றே போதுமென்றேன் ஆனாலும், புண்ணிய வசமிருந்தாலன்றி மாதரும், மாந்தரும் சிறுவரும் தாம் விரும்பி முயன்று சேர்ந்து அனுஷ்டிக்க மாட்டார்கள். குற்றமில்லாத, உலகமெல்லாம் வியக்கின்ற, சட்டத்திலே புண்ணிய வசத்தோடு மெய்யன்பினால் சேர்ந்தோர் எல்லோரும் கடைப் பிடிக்கும்படியான நெறிமுறைகளைச் சொல்கின்றேன்.

சொல்லிடும் சட்டம் தன்னில்
சூழ்ந்தபின் எவரும் தங்கள்
மெல்லிய மனத்தி னூடே
பல்விதப் பழக்கந் தன்னைத்
துல்லிய மாக விட்டுத்
தொலைத்திடத் திடமே வேண்டக்
கல்லினுள் உயிர்க்கூண் ஊட்டும்
கடவுளே குருவாய்த் தேற்றும். (50)

பொருள் :- சொல்லப்படும் சட்டத்தில் சேர்ந்து பின்னர் யாரும் தங்களுடைய அற்பமான மனத்திலே குடிகொண்ட பலவிதக் கூடா வொழுக்கங்களை அடியோடு நன்றாக விட்டு நீக்கித் திடத்தை வேண்டியிருக்கும் சமயத்தில் கல்லினுள்ளும் இருக்கின்ற உயிர்க்கும் உணவு பாலிக்கின்ற கடவுளே குருவடிவில் வந்து தேவைகளைப் பூர்த்திசெய்து உதவும்.

தேற்றிடும் கடவுள் ஒன்றே
திடமுடன் கொள்ள வேண்டும்
போற்றிடும் பிறர்தெய் வத்தைத்
தூற்றிடாச் செயலும் வேண்டும்
சாற்றிடும் உணவில் என்றும்
ஜந்துக்கள் நீக்கல் வேண்டும்
போற்றிடும் வகையில் செய்ஊண்
ஏற்றுஉட் கொள்ள வேண்டும் (51)

பொருள் :- தேற்றும்படியான கடவுள் ஒன்றினையே திடமாக மனத்திற்குள் கொள்ளவேண்டும். பிறராற்போற்றப்படும் பிற தெய்வங்களைத் தூற்றாத செய்கை வேண்டும். மாமிச உணவுகளை நீக்கவேண்டும். நல்ல விதமாகச் செய்த உணவினையே ஏற்று உட்கொள்ள வேண்டும்.

வேண்டுமே கள்வி லக்கல்
விஷயாதி களைவும் வேண்டும்
காண்டொறும் விஷஜந் துக்கள்
களைந்திடா திரக்கம் வேண்டும்
வேண்டிடும் வறிஞர் கண்டால்
விரட்டிடா தீகை வேண்டும்
பூண்டிடும் சட்டந் தன்னுள்
புரிந்திட விரத முண்டு. (52)

பொருள் :- கள் விலக்கல் வேண்டும். மற்றைய கீழ்மையான குணஞ் செயல்களையும் விலக்கல் வேண்டும். விஷ ஜந்துக்களையும் காணும்போதில் உயிர் போக்காத இரக்கமும் வேண்டும். இல்லையென வந்து இரந்து பொருள் வேண்டுவாரை விரட்டாமல் இயன்றது கொடுக்கும் ஈகை வேண்டும். மேற்கொள்ளும் சட்டத்தில் அனுஷ்டிப்பதற்கு விரதமும் உண்டு.

விரதமும் வெள்ளி தோறும்
வீயாது மனத்தோ டொன்றி
நிரதமும் மேற்கொள் வோர்கள்
நிச்சயம் நலமே காண்பார்
சுரதமாம் சேட்டை நீக்கல்
சுக்கிர வாரம் ஒன்றே
கருதியே கடமை செய்தால்
கடவுளை அடைய லாமே. (53)

பொருள் :- வெள்ளிக்கிழமை தோறும் சலியாமல் மனத்தோடு பொருந்தி எப்போதும் விரதத்தினை மேற்கொள்பவர்கள் நிச்சயமாக நன்மையே காண்பார்கள். இல்லற இன்பத்தை நீக்குதல் விரதநாளாகிய வெள்ளி ஒன்றேயாகும். கடவுளை மனத்தில் கருதிக்கொண்டு விரதமாகிய கடமையைச் செய்துவந்தால் கடவுளை அடையலாம்.

அடைந்தோர்கள் உடலைப் பின்னர்
அங்கியிட் டெரித்தல் நீக்கி
உடையவன் நாமம் சொல்லி
உடலுக்கோர் சமாதி ஆக்கிப்
புடைசூழப் புனித மாக்கிப்
புன்மையாம் சொல்லைப் போக்கி
நடைமுறைச் செயல தாலே
நாட்டலாஞ் சட்டம் என்றும். (54)

பொருள் :- அவ்வாறு கடவுளை அடைந்தவர்கள் உடம்பைத் தீயிட்டு எரித்தலை நீக்கி இறைவனுடைய திருநாமம் சொல்லி உடலுக்கொரு சமாதி ஏற்படுத்தி அடியார்கள் உறவினர்கள் சூழ அதனருகிலெங்கும் புனிதமாக்கி அற்பமான சொற்களைப் போக்கி, ஒழுங்கான செய்கையாலே என்றும் சட்டத்தை நிலைபெறச் செய்யலாம்.

என்றுமே இரவி தோன்றும்
ஓரைந்து நாழி கைமுன்
நின்றிடாத் துயிலெ ழுந்து
நீர்மலங் கழித்தல் செய்து
நன்றுதன் பழக்கம் போலே
நாவழித்துப் பல்லுந் தேய்த்துச்
சென்றிடா திரண்ட ரைக்குள்
செய்திட வேண்டும் ஸ்நானம். (55)

பொருள் :- தினந்தோறும் சூரியன் கிளம்புவதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னதாகவே (உயிர்நீங்காத சாவாகிய) தூக்கத்திலிருந்து எழுந்து மலஜலங்களைக் கழித்து நாவழித்துப் பல்லும் தேய்த்து சூரியன் கிளம்புவதற்கு இரண்டரை நாழிகைக்கு முன்னேயே ஸ்நானம் செய்தல் வேண்டும். அதாவது விடியல் 4.00 மணிக்கு எழுந்து காலைக்கடன் முடித்து 5.00 மணிக்குள் ஸ்நானம் செய்தல் வேண்டும் (2½ நாழிகை = 1 மணி).

செய்திடும் ஸ்நானத் திற்குச்
சித்தத்தில் கவலை வேண்டாம்
மெய்நிலை யததற் கேற்ப
விளங்குபல் குளமோ நதியோ
வெய்யவன் கிரணம் பட்டும்
வற்றிடா ஊற்று கொண்ட
துய்யதாம் தங்கள் தங்கள்
திருமனைக் கூபத் தண்ணீர். (56)

பொருள் :- விடியற் காலையிலே செய்யும் ஸ்நானத் திற்காகச் சித்தத்தில் கவலை வேண்டாம். அவரவர்களுடைய உடல்நிலைக்கு ஏற்பக் குளத்திலோ நதியிலோ ஸ்நானம் செய்தல் நல்லது. சூரிய கிரணம் பட்டு வற்றாத ஊற்றையுடைய வீட்டில் உள்ள கிணற்றுத் தண்ணீரிலும் ஸ்நானம் செய்தல் நல்லது.

தண்ணீரே வேண்டு மல்லால்
தழலிட்ட நீரைக் கொண்டு
பண்ணிடும் ஸ்நானம் எல்லாம்
பாபமே விளைப்ப தாகும்
தண்ணீரில் வாழும் ஜீவன்
தரணியில் அனேகம் அன்றோ
தண்ணீரில் தழற்சூ டேறத்
தாங்கிடா தழியும் அந்தோ. (57)

பொருள் :- தண்மையான (குளிர்ந்த) தண்ணீரிலேயே ஸ்நானம் செய்தல் வேண்டும். தீயிட்டு வெப்பமாக்கப்பட்ட வெந்நீரில் முழுகும் முழுக்குப் பாபத்தை உண்டு பண்ணுவதாகும். (ஏனெனில்) தண்ணீரிலே கண்ணுக்குத் தெரியாத அனேக உயிர்கள் வாழ்கின்றன. தண்ணீரில் நெருப்பின் சூடு ஏறுவதால் அதிலுள்ள ஜீவன்கள் அழியும். (ஆகையால் சுடு நீர்கூடாது.)

தாங்கிடக் குளிரின் வேகம்
தணிந்துபின் பழக்க மாகி
ஓங்கிடும் உடல்ஆ ரோக்யம்
ஓடிடும் உடல்நோய் எல்லாம்
பாங்குடன் பாரில் உள்ளோர்.
பார்த்திட ஒளியே மிஞ்சித்
தேங்கிடும் சிறப்புண் டாகும்
சிரசில்தண் ணீரு விட்டால் (58)

பொருள் :- விடியற் காலையில் ஸ்நானம் செய்யும் போது குளிரின் வேகத்தைத் தாங்கிக் கொண்டு செய்து வந்தால் குளிர் நீங்கிப் பழக்கமாகி அனுஷ்டிக்கவே உடலுக்கு ஆரோக்கியம் அதிகமாகும். உடலில் உள்ள நோயும், இனிவரும் நோயும், வராமல் ஓடிவிடும். குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்வதால் உலகத்தவர் காண ஞான ஒளி அதிகரித்து நிலை பெற்ற சிறப்பும் உண்டாகும்.

தண்ணீரில் ஸ்நானம் செய்தும்
தத்தம்சின் னங்கள் பூண்டும்
கண்ணுதல் அருளால் வந்த
கஜமுகன் கோயில் சென்றும்
எண்ணியே மூன்று சுற்றும்
இயற்றிப்பின் துதித்து வீழ்ந்தும்
பண்ணிடும் வணக்கத் தோடு
படிமிசை வாழ்தல் கடனே. (59)

பொருள் :- தண்ணீரில் ஸ்நானம் செய்தும் தங்கள் தங்கள் சமயச் சின்னங்களைப் பூண்டும் சிவனது அருளால் வந்த விநாயகர் கோயிலுக்குச் சென்று மும்முறை வலம் வந்து துதித்து வீழ்ந்து வணங்கி உலகத்தில் வாழ்தல் யாவர்க்கும் கடமையாகும்.

கடனென்ப(து) இந்துக் கட்கே
கிருஸ்தவர் முஸல்மாற் கில்லை
திடமுடன் தரையில் தத்தம்
தெய்வத்தை மனதில் எண்ணிப்
படர்ந்திடும் கொடியோ செடியோ
பல்வகைப் பொருளோ எங்கும்
அடர்ந்திடும் இறைவன் மேனி
இயற்கையாற் பணிதல் நன்றே. (60)

பொருள் :- நித்திய கடன் (அனுஷ்டானம்) இந்துக்களுக்கே, மற்றவர்களுக்கு இல்லை, உலகத்தில் மற்றையவர்கள் தங்கள் தங்கள் தெய்வத்தை மனதில் உறுதியாக எண்ணிச் செடி கொடி முதலிய உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றிலும் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய திருமேனியை இயற்கையின் மேலே நிறுத்திப் பணிதல் நல்லதாகும்.

நன்றுதான் வணங்கிப் பின்பு
நற்சைவ உணவே உண்டும்
ஒன்றினும் உடலின் நோய்க்கென்(று)
உட்கொளேல் வெந்நீர் என்றும்
சென்றுதான் நெஞ்சம் சூதாய்ச்
செயலிலே மாறிப் போனால்
ஒன்றுபின் ஒன்றாய் வந்தே
உடற்பிணி வருத்தும் திண்ணம். (61)

பொருள் :- நன்றாக வணங்கிப் பின் சைவ உணவுகளையே (மாமிச உணவு சேர்க்காமல்) உண்டு நல்ல நெறியில் பொருந்தியிருந்த போதிலும், உடலில் நோய் வந்தாலும் நோய்க்கு அஞ்சி வெந்நீரைப் பயன்படுத்தலாகாது. மனமானது சூதாகச்சட்டச்செயலைவிட்டு மாறிப்போனாலும் ஒரு பழக்கம் உண்டாகி அதனடியாகப் பல கெட்டபழக்கம் ஏற்பட்டுச்சட்டம் தவறி அதனால் பிணிகள் வருந்தச் செய்யும், இது நிச்சயம்.

திண்ணமாய்த் தன்பி றப்பைத்
தீர்த்துவேர் அறுத்துக் காட்டக்
கண்ணொடு கருத்துங் கொண்டு
கடைப்பிடி செயல தாலே
எண்ணியே செய்யுஞ் செய்கை
இறுதியில் வெற்றி கொள்ள
எண்ணரும் கடவுள் நாமம்
எண்ணிநோய் நீக்கல் ஆகும். (62)

பொருள் :- பிறப்பை நீக்கக் கண்ணும் கருத்துமாகச் சட்டத்தைக் கடைபிடித்துச் செய்யும் சட்டச் செய்கையால் கடைசியில் வெற்றி அடையவே எண்ணுதற்கரிய கடவுளுடைய திருநாமத்தைக் கைக்கொண்டு நோயைத்தீர்க்கும் தன்மை உண்டாகும்.

ஆகிய இருபா னெட்டாம்
அளவுநா ழிகைக்குப் பின்பும்
தேகமே தண்ணீர் கொண்டு
தினந்தினம் முழுகற் கடனே
ரோகியோ வலிய தாம்ஊழ்
ரணவிஷக் கடியோ பிரசவ
தேகியோ சேயோ எல்லாம்
துயரறும் காலம் மட்டும் (63)

பொருள் :- ரோகமுடையவரோ, பலமான விதியினால் ஏற்படும் ரணமோ, விஷக்கடியோ, பிரஸவித்த நிலையுடைய பெண்ணோ, குழந்தையோ, எல்லாத் துன்ப நிலையுடைய யாவரையும் அவர்க்கு அவற்றால் ஏற்படும் துன்பம் நீங்கும் காலம் வரையில் இருபத்தெட்டு நாழிகைக்கு ஒருமுறை தினந்தோறும் தண்ணீரில் (குளிர்ந்த நீர் - வெப்பமாக்காத இயற்கை நிலை நீர்) முழுக்காட்டுதல் வேண்டும். (அதாவது காலை & மாலை 4.00 மணிக்கு ஸ்நானம் செய்தல் அவசியம்)

காலம தெதுவா னாலும்
  கருத்தொடு தண்ணீர் கொண்டு
கோலமார் சேயைப் பெற்ற
  கணத்திலே சேய்க்கும் தாய்க்கும்
சீலமோ டுடையான் நாமம்
  செப்பிடும் செய்கை யோடு
ஞாலமே வியக்க என்றும்
  நன்முழுக் காட்டல் வேண்டும். (64)

பொருள் :- (குளிர் காலமோ, வெய்யிற் காலமோ இரவோ, பகலோ) எந்த காலமாக இருந்தாலும் சட்டத்தில் சொன்ன கருத்தோடு குழந்தையைப் பெற்ற தாய்க்கும் குழந்தைக்கும் பெற்றவுடன் தண்ணீரினாலே முழுக்காட்டல் வேண்டும்.

வேண்டியே நீறுந் தண்ணும்
  ஆண்டவன் அருளை எண்ணிப்
பூண்டிடும் துளப மிட்டு
  மீண்டிடத் தானுட் கொண்டால்
காண்டொறும் கலக்கம் சேரா
  கருத்தில்மெய் வருத்தம் சேரா
தாண்டலாம் பிணியை எல்லாம்
  ஆண்டவன் அறிய உண்மை. (65)

பொருள் :- வீபூதியையும், துளசியையும் தண்ணீரில் இட்டு ஆண்டவரை எண்ணிப் பிறவி நீங்க உண்டால் கலக்கம் சேரா, கருத்திலே உடலைப் பற்றிய வருத்தம் சேரா, பிணிகளை எல்லாம் தாண்டலாம். இது ஆண்டவன் அறிய உண்மை.

உண்மையாய் உடைய வர்தம்
  உருவருட் பெயரும் எண்ணித்
திண்மையாய்ச் சிந்தை தன்னில்
  தினமுமே கால மொப்பக்

கண்மையார் மற்றோ ரெல்லாம்
கருதிடுங் குலத்திற் கேற்பக்
கண்மெய்யாய் மூடி என்றும்
கடைத்தேறல் சுலப மாகும். (66)

பொருள் :- உண்மையாவும் திண்மையாகவும், இறைவனுடைய உருவத்தையும், அருளையும், திருநாமத்தையும், சிந்தையில் தினந்தோறும் அந்த அந்த குறித்த காலங்களில் எண்ணிப் பெண்களும் மற்றையவரும் குல தர்மங்களுக்கும் ஏற்றவாறு நடந்து பின் தம்கண்களை உண்மையாக மூடி நிட்டை கூடிக் கடைத் தேறல் சுலபமாகும்.

கடைத்தேறல் சுலபம் சொன்னேன்
கடுகள வச்சம் வேண்டாம்
உடையவன் அல்லால் வேறே
ஒருதுணை கோரல் வேண்டாம்
படைத்துப்பின் காத்த ழிக்கும்
பரமனுக் கடங்கும் கோளை
அடைத்தறிந் திடுநூ லோடும்
அணிமணி மொழியும் வேண்டாம். (67)

பொருள் :- இறைவனைத் தனக்குத் துணையாக இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்வதல்லாமல் மற்றைய மனிதத் துணையை எந்த நிலையிலும் விரும்பி வேண்டிக் கொள்ளுதல் வேண்டாம். யாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கின்ற பரமனுக்கு அடங்கி ஆணைப்படி செல்லுகின்ற கிரகங்களைக்கட்டங்கள் குறித்து அதனுள் அடைத்து வாழ்க்கையில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் இவற்றின் நன்மை தீமைகளைச் சொல்லுகின்ற ஜோதிடமும், பரிகாரமாக அணிகின்ற மந்திரக் கயறு, துணி முதலியனவும், பிரயோகப் படுத்துகின்ற மணி, மருந்து முதலியனவும், வசியம் முதலிய மந்திர மொழிகளும் கூடா.

வேண்டாதே ஆண்ட வன்தன்
  வேட்கையில் வையத் துள்ளே
காண்டொறுங் கருத்தில் ஏதும்
  பூண்டுபின் பிரார்த்திக் காதே
வேண்டிய பொருள்க ளுக்காய்
  வீண்வாது வரினும் என்றும்
ஆண்டர சாளும் நீதி
  அவைமன்றம் அணுகல் தீது. (68)

பொருள் :- உலகத்தில் காண்கின்ற பொருள்களைக் கருதி அவைகளைப் பெறும் வேட்கையினால் மனத்தில் ஏதேனும் தீங்கை வைத்துக்கொண்டு பிரார்த்திக்காதே. பொருளை விரும்பி வீண்வாது வந்தாலும் எக்காலத்திலும் ஆண்டு அரசாளுகின்ற நீதி மன்றங்களாகிய சபைகளை அடைதல் தீதாகும்.

அணுகியே உடலில் ஜீவன்
  அதனதன் வினைகட் கேற்பக்
கணந்தோறும் கடமைப் பட்டுக்
  கணக்குநேர் செய்யப் பட்டுப்
பிணமெனப் பலருந் தூற்றப்
  பிரயாணஞ் செய்யும் ஊனைக்
குணங்களைச் சொல்லிச் சொல்லிக்
  குறையிரந் தழுதல் ஆகா. (69)

பொருள் :- உடலில் ஜீவன் கூடி நின்று அந்த அந்த உயிர்களின் வினைவிளைவுகளுக்கு ஏற்ப நன்மை, தீமை, சுக துக்கம், வாழ்நாள், முதலியவற்றைப் பற்றிய அளவுகள் ஒழுங்கு செய்யப்பட்டதின் மூலமாக உயிர்கள் ஒவ்வொரு கணந்தோறும் அந்த விதிகட்குக் கடமைப்பட்டும் அவதிப் படுகின்ற உயிர் பிரியும்போது பிணம், பிணம், என அருவருப்புடனே தூற்றும்படியான (புலையனும் விரும்பியுண்ணாத புன்புலால் யாக்கையாகிய) ஊனை உடைய மனிதரின் குணங்களைச் சொல்லிச் சொல்லிப் பிறரிடம் தம் குறைகளைக் கூறி யாசித்து

அழுதல் ஆகாது. புகழ்தலுக்கு ஏற்ற குணஞ் செயலுடைய இறைவனையே புகழ்தல் வேண்டும். என்பது.

அழுதிடும் நிலைக்கி ரங்கி
  அவ்வுயிர் பிழைக்கா தந்தோ
முழுவதும் கூட்டம் கூட்டும்
  முடிவிலே உண்மை சொல்லிப்
பழுதறத் தக்க தாகப்
  பாரில்நன் னடையை ஏற்றித்
தொழுதுபின் சமாதி செய்தால்
  தூய்மையை எய்த லாகும். (70)

பொருள் :- அழும்படியான தன்மையைப் பார்த்து இரங்கி உதவி செய்யப்பட்ட (அழுது குறையிரந்த) உயிரானது பிழைத்துத் தூய்மையாவதில்லை. (பின்னர் எந்த நிலையில் தூய்மையடையலாம் என்றால்) உலகம் முழுவதும் கூட்டம் கூட்டும்படியான நிலையில் முடிவில் உண்மையைக் கூறி குற்றம் தீரத்தக்க முறையில் உலகில் நல்ல நெறிச் செயல்களைப் பரப்பி இறைவனை மெய்யன்போடு தொழுது சமாதி செய்தலாலேயே தூய்மையை அடைய முடியும் என்பது.

எய்திட என்றும் இன்பம்
  இணையிலா நிட்டை சொல்வேன்
துய்த்திடும் இரவூண் பின்னும்
  துயில்கொளும் தருணம் முன்னும்
வெய்யவன் உதித்த பின்னும்
  விரைந்துச்சி யடைந்த பின்னும்
மெய்ப்புலன் அடக்கி வீற்றால்
  விளங்கும்மெய்ப் பொருள்உன் உள்ளே. (71)

பொருள் :- என்றும் பேரின்பம் அடைவதற்கு வழியான நிஷ்டையைச் சொல்லுகின்றேன். இரவில் சாப்பிட்டபின்னும், தூங்குவதற்கு முன்னும், சூரியன் உதித்த பின்னும், சூரியன் உச்சியை அடைந்த பின்னும், உடலில் புலன்களால் நிலை

மாறுகின்ற ஐம்பொறிகளையும் அடக்கி ஒன்றியிருந்து தியானிக்கும் தனிமையினால் (சிறப்பினால்) அந்தத்தனிமையில் பரம்பொருள் உன்னிதயத்துள் விளங்கும்.

உன்உள்ளே காணக் காணும்
உருவத்தின் நிலையைக் கொண்டும்
அன்புண்மை யகத்திற் கொண்டும்
அல்லலை மிகவும் தாங்கி
முன்புள்ள முயற்சி யாலே
முடிவிலாப் புகழ்ச்சி கொள்ளத்
துன்பஇன் பத்தை விட்டால்
தூயவான் பொருளுட் சேரும். (72)

பொருள் :- உனக்குள்ளே காணப்படும் அந்த உருவத்தினுடைய நிலையைக் கொண்டு, மெய்யன்பு, உண்மை இவற்றை உறுதியாக மனத்தில் கொண்டு துன்பங்களைத் தாங்கிக்கொண்டு, ஊழோடு பொருந்திய முயற்சியினாலே முடிவிலாத புகழ்ச்சியைக் கொள்ள இன்ப துன்பங்களை விட்டால் தூய்மையான பரம்பொருள் உள்ளத்தில் தோன்றி விளக்கமாக இருந்துகொண்டிருக்கும்.

வான்பொருள் உள்ளே பார்த்து
வந்திடும் பழக்கம் கொண்டால்
ஊன்தொறும் உயிராய் நிற்கும்
ஒருவனைக் குருவாய்ப் பார்த்துத்
தான்பெறும் காட்சி யாலே
தரணியில் தானு மவனாய்
வான்பெறு வெளியி லாடும்
வள்ளலைக் காட்ட லாமே. (73)

பொருள் :- பரிசுத்தத் தன்மையுடையதான பரம்பொருளை மனத்திற்குள் பார்த்து வருகின்ற பழக்கத்தைக் கைக்கொண்டால் ஊனார் புழுக்கூடுகள் எல்லாவற்றிலும் உயிராக நின்று நிலவுகின்ற இறைவனையே குருவடிவில் பார்த்துத் தான்பெறுகின்ற

காட்சியினால் தானும் அவனாகும் நிலைமை தோன்ற, சிதாகாசத்தில் ஆடுகின்ற ஈசனைப் பிறர்க்கும் காட்டலாகும்.

காட்டலாங் கடவுள் எங்கும்
கருத்துள்ளோர் எவரா னாலும்
கூட்டலாங் குறைவி லாத
குணந்தரு சட்டத் தாலே
ஓட்டலாம் உலகில் என்றும்
ஒழிவிலாப் பிணிபே யெல்லாம்
நாட்டலாம் நலமே எங்கும்
நம்பிக்கைச் செயல தாலே. (74)

பொருள் :- மெய்யன்பு, உண்மை, உறுதி இவை குடிகொண்ட சிந்தையுடைவர் எவரானாலும் கடவுளை எங்கும் காட்டலாம். குறைவில்லாத நன்மைகளைத் தருகின்ற சட்டத்தினால் கடவுளை அடையும்படிச் செய்யலாம். உலகிலுள்ள பிணி பேய்களை யெல்லாம் சட்டச் செயல் முறையால் ஓட்டலாம். நம்பிக்கையாகச் செய்துவருகின்ற சட்ட நெறியாலே நலத்தை எல்லா விடங்களிலும் நிலை பெறச் செய்யலாம்.

செயலிலே சட்டங் கொண்டும்
செம்மைதான் அறியா ஒருவர்
செயற்கைமா றிடிலோ அவர்தம்
செயலது தோஷ மாகா
செயற்கையாற் சிறுமை யாலோ
செயமன மற்ற தாலோ
முயற்சிகை விட்டோர்க் குடனே
முரணறி குறியாம் துயரே. (75)

பொருள் :- செயலில் சட்டத்தைக்கொண்டு செம்மையறியாதவர் ஒருவர் சட்டச் செயற்கையிலிருந்தும் சிறிது மாறினால் அவருடைய செயல் தோஷமுடையதாகாது. செயற்கையினாலோ, சிறுமையினாலோ (இழிவான எண்ணம்) செய்வதற்கு ஏலாத முறையினாலோ சட்டச் செயல்களைக்

கைக்கொண்டு நடக்கும் முயற்சியைக் கைவிட்டால் அவர்களுக்கு இச்செய்கை முரணானதாகும் என்பதை அறிவிக்கும் அடையாளம் துயரமேயாகும் (துன்பம் மிகும் என்பது)

துயர(து) எதனாற் கேளு
சுற்றத்தோ டாரா யுங்கால்
செயலிலே சட்டம் மீறும்
சித்தத்திற் கறிவு றுத்தப்
பயங்கரக் கனாக்கள் காண
பதைத்துத்தன் பக்க முள்ளோர்
பயங்கொளும் விந்தை செய்தல்
பரமனின் சட்டத் துண்மை (76)

பொருள் :- சுற்றத்தோடும் அடியார்களோடும் தான் அடையும் துயரம் எதற்கு என்பதைக் கேளு, சட்டச் செயலை மீறும்படியானவரது சித்தத்திற்கு அறிவு புகட்டவேயாகும். பயங்கரமான கனாக்கள் காண அதனால் மனம் பதைத்துத் துன்பமடைய, பக்கத்திலுள்ளோர் அந்நிலையைக் கண்டு பயங்கொண்டு நன்னெறியில் நடக்க விந்தைகள் செய்தல் பரமனை அடைய வழிகாட்டும் சட்டத்தினது உண்மையாகும்.

சட்டத்தை யறிந்து மீறும்
கட்டத்தில் தனக்குத் தோன்றும்
துட்டத் துயர னைத்தும்
கிட்டும் போதே பெரிதாம்
அட்ட திசையோர் யார்க்கும்
அகற்றிட அரிதா கும்மே
பட்ட துயரால் உணர்ந்தால்
பலனுண்டு காண்பாய் மனிதா (77)

பொருள் :- சட்டச் செயல்முறைகளை அறிந்து மீறும் சமயத்தில் உண்டாகின்ற கடுமையான கஷ்டங்கள் வந்து சேரும்போதே பெரிதான நிலையை யுடையன. (பின்னும் அதிகமாகும் என்பது கருத்து) எட்டுத்திக்கிலும் வாழ்பவர்களுக்கு

அத்துன்பத்தை நீக்குதல் மிக மிக அரிய செயலாகும். அநுபவித்த துயரத்தினை அறிவினால் ஆராய்ந்து உணர்ந்தால் பலனடைய வழியுண்டு.

மனிதர்கள் கூடத் தோன்றி
வளர்ந்ததில் மடமை ஒன்று
தொனிதரும் பேச்சில் எல்லாம்
தோய்ந்திடும் மனமும் ஒன்று
கனிதரு மரத்தை விட்டுக்
காய்மரஞ்சேர் கருத்தும் ஒன்றாம்
இனிவரும் நிகழ்வை எண்ணா
இறுமாப்பும் அதோடொன்(று) ஆகும் (78)

பொருள் :- மனிதருடன் கூட வளர்ந்ததில் மடமை ஒன்று; உரக்கப் பேசும் பேச்சில் ஈடுபடும் அற்பமான மனம் ஒன்று; சன்மார்க்கத்தை நாடியடையாமல் துன்மார்க்கத்தை தேடி அடையும் கெட்ட விருப்பமுடைய கருத்து ஒன்று; இனி, வாழ்நாளில் பின் நிகழ இருப்பவற்றையும், மறு பிறவியைப் பற்றி எண்ணி அது தீர்க்கும் வழிமுறையையும் எண்ணாமல் இறுமாப்படைந்திருப்பது ஒன்றாகும். இவையெல்லாம் பயன்தரா என்பது நல்ல பழந்தரும் மரத்தை விட்டு காய் மரத்தை நாடுவது போலாகும்.

இறுமாப்பி லாது நீயே
விரும்பினால் துயரந் தீரக்
கருத்திலே செய்த குற்றம்
கண்டிடப் புவியில் எங்கும்
இருந்திடும் ஈசன் கோயில்
இல்லிலே இருக்கை கண்டே
ஒருமூன்று வலவந் தேத்தி
உடையவன் உருவை எண்ணு (79)

பொருள் :- துயரங்கள்தீர விரும்பினால் இறுமாப்பில்லாமல், அறியாது செய்த குற்றங்களைக் கருத்திலே உண்மையை உணர்ந்து

கைக்கொண்டு நடக்கும் முயற்சியைக் கைவிட்டால் அவர்களுக்கு இச்செய்கை முரணானதாகும் என்பதை அறிவிக்கும் அடையாளம் துயரமேயாகும் (துன்பம் மிகும் என்பது)

துயர(து) எதனாற் கேளு
  சுற்றத்தோ டாரா யுங்கால்
செயலிலே சட்டம் மீறும்
  சித்தத்திற் கறிவு றுத்தப்
பயங்கரக் கனாக்கள் காண
  பதைத்துத்தன் பக்க முள்ளோர்
பயங்கொளும் விந்தை செய்தல்
  பரமனின் சட்டத் துண்மை (76)

பொருள் :- சுற்றத்தோடும் அடியார்களோடும் தான் அடையும் துயரம் எதற்கு என்பதைக் கேளு, சட்டச் செயலை மீறும்படியானவரது சித்தத்திற்கு அறிவு புகட்டவேயாகும். பயங்கரமான கனாக்கள் காண அதனால் மனம் பதைத்துத் துன்பமடைய, பக்கத்திலுள்ளோர் அந்நிலையைக் கண்டு பயங்கொண்டு நன்னெறியில் நடக்க விந்தைகள் செய்தல் பரமனை அடைய வழிகாட்டும் சட்டத்தினது உண்மையாகும்.

சட்டத்தை யறிந்து மீறும்
  கட்டத்தில் தனக்குத் தோன்றும்
துட்டத் துயர னைத்தும்
  கிட்டும் போதே பெரிதாம்
அட்ட திசையோர் யார்க்கும்
  அகற்றிட அரிதா கும்மே
பட்ட துயரால் உணர்ந்தால்
  பலனுண்டு காண்பாய் மனிதா (77)

பொருள் :- சட்டச் செயல்முறைகளை அறிந்து மீறும் சமயத்தில் உண்டாகின்ற கடுமையான கஷ்டங்கள் வந்து சேரும்போதே பெரிதான நிலையை யுடையன. (பின்னும் அதிகமாகும் என்பது கருத்து) எட்டுத்திக்கிலும் வாழ்பவர்களுக்கு

அத்துன்பத்தை நீக்குதல் மிக மிக அரிய செயலாகும். அநுபவித்த துயரத்தினை அறிவினால் ஆராய்ந்து உணர்ந்தால் பலனடைய வழியுண்டு.

மனிதர்கள் கூடத் தோன்றி
 வளர்ந்ததில் மடமை ஒன்று
தொனிதரும் பேச்சில் எல்லாம்
 தோய்ந்திடும் மனமும் ஒன்று
கனிதரு மரத்தை விட்டுக்
 காய்மரஞ்சேர் கருத்தும் ஒன்றாம்
இனிவரும் நிகழ்வை எண்ணா
 இறுமாப்பும் அதோடொன்(று) ஆகும் (78)

பொருள் :- மனிதருடன் கூட வளர்ந்ததில் மடமை ஒன்று; உரக்கப் பேசும் பேச்சில் ஈடுபடும் அற்பமான மனம் ஒன்று; சன்மார்க்கத்தை நாடியடையாமல் துன்மார்க்கத்தை தேடி அடையும் கெட்ட விருப்பமுடைய கருத்து ஒன்று; இனி, வாழ்நாளில் பின் நிகழ இருப்பவற்றையும், மறு பிறவியைப் பற்றி எண்ணி அது தீர்க்கும் வழிமுறையையும் எண்ணாமல் இறுமாப்படைந்திருப்பது ஒன்றாகும். இவையெல்லாம் பயன்தரா என்பது நல்ல பழந்தரும் மரத்தை விட்டு காய் மரத்தை நாடுவது போலாகும்.

இறுமாப்பி லாது நீயே
 விரும்பினால் துயரந் தீரக்
கருத்திலே செய்த குற்றம்
 கண்டிடப் புவியில் எங்கும்
இருந்திடும் ஈசன் கோயில்
 இல்லிலே இருக்கை கண்டே
ஒருமூன்று வலவந் தேத்தி
 உடையவன் உருவை எண்ணு (79)

பொருள் :- துயரங்கள்தீர விரும்பினால் இறுமாப்பில்லாமல், அறியாது செய்த குற்றங்களைக் கருத்திலே உண்மையை உணர்ந்து

வருந்தி (சட்டச் செயல் முறைகளை மேற்கொண்டதோடு நில்லாமல்) எங்கும் நிறைந்த இறைவனைக் கோயிலிலே கண்டு வலம் வந்து புகழ்ந்து பாடி இறைவனை வணங்கி உருவத்தை எண்ணிக் கொண்டே யிருப்பாயாக.

எண்ணியே வலங்கள் வந்தே
இறுதியில் பணிதல் கண்டு
நண்ணிய நோய்கள் எல்லாம்
நலந்தந்து போகும் தானே
புண்ணிய சட்டச் செய்கைப்
பற்றுளோர் கண்டும் கேட்டும்
புண்ணியஞ் சேர்த்துக் கூடிப்
புகழுடற் கூடு வாறே. (80)

பொருள் :- இறைவனுடைய உருவத்தை மெய்யன்போடு மனத்தில் எண்ணி வலம் வந்து பணிதலைக் கண்டு உடலில் உள்ள நோயெல்லாம் நலந்தந்து போய்விடும். புண்ணிய வழியாகவுள்ள சட்டச் செய்கையில் பற்றுள்ளவர் அந்த நிலையைக் கண்ணாற் கண்டும், பிறர் சொல்லக் கேட்டும், புண்ணியம் மிக அதிமாகிப் புகழுடம்பை அடைவார் என்பது.

கூடியே சட்டம் நின்று
குறுக்கிடும் வினைக்காட் பட்டும்
வாடிடாத் திறமே கொண்டு
வகையுடன் நடந்து வந்தால்
நீடிடா இடர்ப்பா டெல்லாம்
நிச்சயம் நீக்க மாகிக்
கூடிடும் சட்டக் கொள்கை
குறைவற நாட்ட லாமே (81)

பொருள்:- சட்டத்தில் கூடியிருந்து, குறுக்கிட்டுத் துன்பந்தரும் ஊழ்வினைக்கு ஆளாக இருந்தும் சலியாத வன்மையோடு நெறிமுறைகளைக் கடைப்பிடித்து நடந்து வந்தால் இடர்கள் எல்லாம் நீக்கமாகிப் பேரின்பம் கூடும். சட்டக் கொள்கையையும்,

குறைகள் நீங்கும் படியாக எங்கும் நிலைபெறச் செய்யலாம்.

குறைவறச் செய்யும் சட்டக்
கூலியோ மிகவும் பெரிது
நிறைவிலாச் செய்கை எனினும்
நிச்சயம் நன்மை யுண்டு
முறையுடன் நடப்போர் எல்லாம்
முடிவிலா இன்பம் கொளலாம்
மறைபுகழ் மன்று ளாடும்
வள்ளலோ டொன்ற லாமே. (82)

பொருள் :- குறைவில்லாத சட்டச் செய்கைக்குக் கூலிமிகப் பெரியதாகும். இந்த சட்டச் செய்கையால் நன்மை நிச்சயம் உண்டு. நெறிமுறையுடன் நடப்போரெல்லாம் முடிவிலா இன்பம் அடையலாம். பொன்னம்பலத்திலே ஆடுகின்றவனும், வேதங்களாற் புகழப்படுபவனும், ஆகிய இறைவனை ஒன்றியிருக்கும் தன்மை உண்டாகும் (சட்டச் செய்கைக்குப் பெரிய கூலி; மன்றுளாடும் மறை புகழ் வள்ளலோடு இரண்டறக் கூடுதல்).

ஒன்றலாம் இல்லுள் இன்பம்
ஊருளேநற் பேருங் கொளலாம்
நன்றென்றே ஊருஞ் சூழ்ந்து
நாட்டுக்கோர் இரவி யாவார்
சென்றெங்கும் ஐயம் நீக்கிச்
சிந்தையிற் றெளிவுண் டாக்கி
நின்றெல்லா நலமும் ஓங்க
நீதிகள் பரப்பு வாரே. (83)

பொருள் :- இல்லறத்திலே இன்பத்தைப் பொருந்தலாம், ஊரில் நல்ல சிறப்பும் பெறலாம். நல்லதாகும் என்று ஊரார் ஆராய்ந்தறிந்து மேற்கொள்ள நாட்டுக்கே சூரியனைப்போல் விளங்குவார். எல்லாச் சபைகளுக்குஞ் சென்று சந்தேகத்தைப் போக்கிச் சிந்தையில் தெளிவையுண்டாக்கி, நன்மை நிலைபெறும் படியாகவும், நல்லநெறி முறைகள் ஓங்கவும், நீதிகளைப் பரப்புவார்.

பரப்பிடும் சட்டம் சடலம்
  பலம்பெற உடையோன் நாமம்
கருத்துகொள் உறுதி யுயிராம்
  கைவிடில் காண்பார் யாரே
திரப்படு நெஞ்சங் கொண்டால்
  தெளிவிலே தீமை சேரா
உருவிலே அருவங் கண்டும்
  அருவுரு வாக லாமே. (84)

பொருள் :- நன்னெறியைத்தரும் சட்டத்தையும் இறைவன் திருநாமத்தையும் உறுதியாகக் கருத்திற்கொண்டு நடக்கும் செயலானது உடல் எடுத்ததனால் அடையும் பயனையடைய உயிர்போன்ற தன்மையினதாகும். கைவிட்டால் பயன் எவ்வாறு காணமுடியும். உறுதியான நெஞ்சம் கொண்டால் தெளிவில் தீங்கு இல்லை. உருவத்தை வைத்து வணங்கிப் பின் (முதிர்வினால்) தாமாகவே அவ்வுருவம் நீங்கி அருவத்திலே இறைவனைக் கண்டு உருவமில்லாத நிலையும் உருவமுள்ள நிலையும் கலந்த நிலையினைக் கண்டு பேரின்பம் அடையலாம்.

ஆகலாம் சட்டத் தாலே
  அவனியே அழைப்ப ழைக்கப்
போகலாம் போய்ப்பின் வரலாம்
  பூரண வணக்கங் கொண்டோர்
ஆகிய அன்பர் முன்னும்
  அணுகிவீண் பெருமை பேசிச்
சாகவே வேண்டாம் சொன்னேன்
  சத்தியம் அறிந்து சேரு. (85)

பொருள் :- சட்டநெறிமுறைகளை அனுஷ்டிப்பதால் இறைவனை அடையலாம். உலகமே அழைப்பழைக்கப் போகலாம். போய்ப்பின் சிறப்புப் பெற்று வரலாம். (சாதாரண மக்களிடத்திலே அல்லாமல்) உலகத்தவரால் செய்யப்படும் பூரண வணக்கங்ளைக் கொண்ட மெய்யன்பரிடத்தும் வீண் பெருமைபேசி அழியவேண்டாம். சத்தியத்தை அறிந்து சேர்வாயாக.

அறிந்துபின் சேரும் சட்ட
அன்பர்ஒவ் வொருவ ரும்தன்
திறந்தெரிந் தவர்க ளூடே
திருவருட் கனாச்செ யல்கள்
அறிந்தனு பவித்து ணர்ந்தே
அகத்திலே தெளிவு காண
அறிமுக மாயி னோர்முன்
இருந்துரை யாடல் நன்றே. (86)

பொருள் : சத்தியத்தையறிந்து சேருகின்ற, சட்டத்தைக்கடைப்பிடிக்கின்றமெய்யன்பர் ஒவ்வொருவரும் இறைவனுடைய திருவருட் செயல்களைக் கனாக்களால் அறிந்து அனுபவித்து உணர்ந்து மனத்தில் தெளிவு காண்பதற்குத் தங்கள் தங்கள் தன்மைகளை அறிந்தவரும் அறிமுகமானவரும் ஆகியவர்களிடத்தில் உரையாடுதல் நல்லதாகும்.

இருந்துரை யாடிக் கூடி
இருவரும் பிரிந்த பின்னே
நிரந்தரம் நலமே காண
நிகழ்ந்ததைக் கடிதத்தேத்திப்
புரம், புரம் செய்தி சேர்க்கும்
பெட்டியில் முறையாய்ப் போட்டுப்
பெருகிடும் அன்போ டொன்றிப்
பிரதிஎதிர் பார்த்தல் மேலாம். (87)

பொருள் : இருவரும் கூடியிருந்து உரையாடிப் பிரிந்த பின்பு, எப்பொழுதும் நன்மையே காணும்படியாகத் தமக்குள் முன்னும் பின்னும் நிகழ்ந்தவற்றைக் கடிதத்தில் எழுதி ஊர்கள்தோறும் செய்திகளைச் சேர்க்கும் பெட்டியில் போட்டு, அன்புடன் மாற்றுக் கடிதம் எதிர்நோக்குதல் மேலான காரியமாகும்.

மேலான செய்தி காண
வேண்டிட அறிவு வேண்டும்
பாலான மனது கொள்ளப்
பலவழித் திறனும் வேண்டும்
மாலான செய்கை எல்லாம்
மதித்திடா வுறுதி வேண்டும்
நாலிலா நூறும் கண்டு
நன்மையே நாட வேண்டும் (88)

பொருள்:- மேன்மையான செய்தியைக் காணவும், மேன்மையான செய்தியை விரும்பிப் பிறரை வேண்டவும், நல்லறிவு வேண்டும். தூய்மையான மனது கொள்ளப் பல வழிகளாலும் திறமை நிறைந்திருத்தல் வேண்டும். மதி மயக்கும் செயல்களை எல்லாம் மதிக்காத மனவுறுதி வேண்டும். தொண்ணூற்றாறு தத்துவங்களையும் கண்டு நன்மையே நாடுதல் வேண்டும்.

வேணுமென் றுறுதி கொண்டால்
வேண்டிடு மெல்லாம் சேரும்
வேணுகைக் கொண்டோன் போற்றும்
விதிதலை அணியு மீசன்
நீணில மெங்குஞ் சென்று
நிறைந்துதான் வந்து பின்னே
தோணுவ தென்னும் தத்வத்
திறமறிந் தவர்க்கே யின்பம் (89)

பொருள :- இறைவனுடைய அருள் பெறுதல் வேண்டின், இறைவனை உறுதியாக மனத்துள்கொண்டால், வேண்டும் அருட் செல்வம் எல்லாம் வந்துசேரும். மகா விஷ்ணுவால் போற்றப்படும் ஈசனும், கபாலங்களை மாலையாக அணியும் ஈசனும் ஆகிய கலை வடிவினையுடைய தில்லைக் கூத்தனே உலகமெங்கும் தெய்வக் கலையாக நிறைந்து இருந்து பின் தில்லையிலே அர்த்த ஜாமத்தில் விளங்குகிறான். (இவ்வாறே தெய்வக் கலை

தில்லையிருந்து உலகமெங்கும் வியாபித்து விளங்கிப் பின் தில்லையிலே கூடிப்பின் உலகெங்கும் வியாபிக்கிறது. என்பது) இந்த தத்துவத்தினை அறிந்தவர்க்கே இன்பம் நிலைக்கும்.

இன்பமே துன்ப மீயும்
இறுதியென் றுணர்ந்தோர் என்றும்
துன்பமே இன்பத் திற்குத்
துணையெனத் துணிந்து வாழ்வார்
அன்பிலே உலகம் கண்டும்
அகத்திலே உவகை கொண்டும்
என்புமேல் தசைகள் போலே
இணைபிரி யாது வாழ்வார். (90)

பொருள் :- இன்பமே துன்பமாகிய அழிவைத் தருவதாம் என்று உணர்ந்தவர்கள் எந்நாளும் துன்பமே இன்பத்திற்குத் துணையாகும் என்று உறுதியாகத் துணிந்து எண்ணித் துன்பப் பட்டாயினும் நன்மை பயக்கும் வினைகளைச் செய்து வாழ்வார்கள். அப்படி நடப்பவர்கள் அன்பிலே உலகத்தைத் தமதாகக் கண்டு அதனால் மனத்தில் மகிழ்ச்சிக் கொண்டு எலும்புக்கு மேலே சதைகள் பொருந்தியிருப்பது போலத்தாமும் உலகமும் அன்பால் சேர்ந்திருப்பதிலிருந்து பிரியாமல் சேர்ந்து வாழ்வார்கள்.

பிரியாத வாழ்வு என்ப
புவியிலே எவர்க்கும் அரிது
தெரியாத தத்து வத்தைத்
தெரிந்துகொண் டவர்கள் எனினும்
புரியாத செயல்கள் செய்து
புவிபுகழ் கொள்வ தென்ப(து)
அரிதினும் அரிதா மன்றோ
அவனிவாழ் வெதிலும் உண்மை. (91)

பொருள் :- அன்பால் இணைந்த நிலையிருந்து பிரியாது வாழ்தல் என்பது உலகத்தில் எவர்க்கும் அரியதாகும். யாரும்

அறியாத தத்துவத்தைத் தெரிந்துகொண்டவர் என்றாலும் உலகத்தவர்கட்கும் புரியாத செயல்கள் செய்து உலகத்தவர்களால் புகழ்கொள்ளுதல் முடியாது. (இது) உலக வாழ்க்கை எதிலும் முடிவாகக் கண்ட உண்மையாகும்.

உண்மையோ டுயர்வு மின்றேல்
உடல்வெளுப் பிருந்து மென்ன
பெண்மையாற் பகைவர்க் கஞ்சிப்
புன்மைசேர் செயல்பு ரிந்தால்
மண்ணுளோர் மதிக்க வாழும்
வகையதே கிட்டி டாதே
உண்மையை அறிந்தோர் எல்லாம்
அணுகிட அஞ்சு வாரே. (92)

பொருள் :- உண்மையும் உயர்ந்த குணஞ்செயல்களும் இல்லாமற் போனால் உடல் வெளுப்பாக இருந்ததினால் பயனில்லை (வெளி வேஷத்தாற் பயனில்லை) பேடித்தனத்தினால் பகைவர்க்குப் பயப்பட்டு அற்பமான (பொறாமை, வஞ்சகம், பொய்ச்சான்று, தூற்றுதல் முதலியன) குணஞ் செயல்களைக் கைக்கொண்டால், உலகத்தவர் உயர்வாக மதிக்கும் உயர்ந்த வாழ்வு வாழும் வகைகிட்டவே கிட்டாது. உண்மையும் உயர்வும் இல்லாமல் அற்பமான குணஞ் செயல்களைக் கண்டறிந்தவர்கள் எல்லோரும் அப்படிப்பட்டவரை அணுக அஞ்சுவார்கள்.

அஞ்சியே அவர வர்தாம்
அணுகிடா திருந்தா லுந்தான்
வஞ்சனை செய்து வாழ்வை
வளங்குன்றச் செய்ய எண்ணி
மிஞ்சிய பொறாமை யாலே
மெய்யிலா வாது கொண்டு
நெஞ்சிலே நீதி நேர்மை
நீங்கியே ஏங்கி அலைவார். (93)

பொருள் :- அற்பமான தன்மைகளை அறிந்தவர் ஒவ்வாருவரும் அத்தகையவரை அணுகாது விலகியிருந்தாலும் அற்ப குணமுடையவர், பிறர்க்கு வஞ்சனையைச் செய்து அவர்கள் வாழ்வைப் பாழ்படுத்த எண்ணி மிகுந்த பொறாமையினால் உண்மை சிறிதுமில்லாத வாதத்தைத் தொடுத்துக்கொண்டு நெஞ்சில் நீதியும் நேர்மையும் அறவே இல்லாமல் ஏங்கி அலைவர்.

அலைந்த லைந்தனு தினமும்
அக்கப்போர் ஆயு தத்தால்
கலைத்தெய்வ பக்தி கொண்டோர்
கலங்கிடும் நிலையுண் டாக்கித்
தலையிலே ரட்சை யேற்றுத்
தன்னகம் குன்றி என்றும்
அலைகடற் றுரும்பு போலே
அல்லலால் அழிவார் திண்ணம். (94)

பொருள் :- ஏங்கி அலைந்து அனுதினமும் வஞ்சகம், பொய், பொறாமை இவற்றால் எழுகின்ற வார்த்தைகளைக் கொண்டே அக்கப்போர் என்ற ஆயுதத்தினால், நடராஜரிடம் உண்மையான பக்தி கொண்டவர் கலங்கும் நிலையை உண்டாக்கி தலையிலே பாதாரக்ஷை அடி வாங்கி தனது மனம் அற்ப நிலையை அடைந்து துன்பத்தால் அழிவார். இது திண்ணம்.

திண்ணமாய்ச் சொன்ன இந்த
செய்திஎன் கண்ணாற் கண்டேன்
கண்ணுளார் எல்லாம் காணக்
கடமையை யுணர்ந்து சொன்னேன்
நண்ணுவார் எவர்க்கும் நடுவு
நல்லவர் நலியத் தாளேன்
பெண்ணொரு பாகத் தானின்
பேரன்பன் புவியில் நானே. (95)

பொருள் :- திண்ணமாய்ச் சொன்ன இந்த செய்தியை என் கண்ணால் கண்டேன். அவ்வாறே கண்ணுள்ளவர்

காணும்படியாகக் கடமையை உணர்ந்து சொன்னேன். நல்லவர் என்று கூறப்படுபவர்கள் பிறர்க்கு நீதியற்ற செயல் புரிந்தால் அதனால் பிறர் வருந்துகையில் அதனைத் தாங்கிப் பொறுக்கமாட்டேன். நான் (இயன்ற அளவு தண்டித்தல் செய்வேன்) அர்த்த நாரீஸ்வரரின் பேரன்பன் ஆவேன்.

புவியிலே எவர்க்குந் தீங்கு
புரிந்திடாப் புத்தி வேண்டும்
கவியிலே உயர்ச்சி உண்மை
கண்டிடும் திறமை வேண்டும்
செவியிலே பிறரைப் புகழும்
செய்திகேட் டுணர்தல் வேண்டும்
தவித்திடும் உயிரைக் கண்டு
தான்தேற்றி யுதவல் வேண்டும் (96)

பொருள் :- புவியிலுள்ள எவர்க்கும் தீங்கு புரியத் தூண்டாத நல்ல புத்தி வேண்டும். கவிகளில் உயர்வும், உண்மையும் காணும்படியான திறமை வேண்டும். பிறரைப் புகழும் செய்தியைக் கேட்டு புகழப்பட்டவரின் உயர்வினைக் கண்டு நன்கு உணர்தல் வேண்டும். தவிக்கின்ற பிறரைக் கண்டு தேற்றி இயன்ற முறையில் உதவி புரிதல் வேண்டும்.

உலகிலே பிறப்பிற் குள்ளே
உயர்ந்தது மனித ஜன்மா
அலகிலாச் சடலங் கொள்வ
ததனினு முயர்வே யாகும்
பலகலைத் தேர்ச்சி பெற்றுப்
பார்புகழ் பேருங் கொண்டு
நிலையதாய் உடலைச் செய்யும்
நீதிமான் அதிலும் உயர்வு. (97)

பொருள் :- உலகப் பிறப்புக்களுக்குள் உயர்ந்தது மனித ஜன்மா. இறைவனோடு கூடி அழியாத நிலையை ஏற்கும் உடல் கொள்வது அதனினும் உயர்வேயாகும். பல கலைகளிலும்

தேர்ச்சிபெற்று உலகம் புகழும் புகழைக் கொண்டு நிலையாகப் புகழுடம்பைப் பெறுகின்ற நீதிமான் அதனினும் உயர்வு.

உயர்வுளே உயர்வாம் உள்ளக்
கள்ளமில் லாத வாழ்வே
அயர்ந்தபேர் பொருளைக் கவரா
அகங்கொளல் அதிலும் உயர்வு
புயத்துடை வலியி னாலும்
புரையிலா நடையி னாலும்
முயற்சிசெய் துயர்ந்து வாழும்
முறைய(து) அதிலும் உயர்வு (98)

பொருள் :- மிகவுயர்வானது மனத்தில் வஞ்சகமில்லாத வாழ்வேயாகும். கவனமில்லாத பேர்களின் பொருள்களை அபகரிக்கநினைப்பதும் செய்யாத மனம் உடையவராதல் அதனினும் உயர்ந்ததாகும். உடற்பலத்தாலுங், குற்றங் கூற முடியாத ஒழுக்கத்தாலும், முயற்சி செய்து அதனால் இறைவன் அருள் பெற்று உயர்ந்து வாழும் முறையானது அதனினும் உயர்ந்ததாகும்.

முறையது போல நாளும்
முதல்வனைத் துதித்து நின்று
குறையற்று வாழும் மக்கள்
குறிப்பிட அதிலும் உயர்வே
இறைவனால் நன்மை தீமை
இரண்டுமே நிகழ்வ தென்று
நிறைமன மெண்ணி வாழும்
நிலைய(து) அதிலும் உயர்வு (99)

பொருள் :- முறையாகச் சொல்லப்பட்டபடி கடவுளை வணங்கிக் குறையில்லாமல் வாழ்கின்ற மக்களைக் குறிப்பிடுதல் அதிலும் உயர்வு. இறைவன் செயலாலேயே நன்மை தீமை இரண்டுமே நிகழ்வனவாகும் என்று, மாட்சிமையும் திண்மையும் உள்ளமனத்தில் உறுதியாக எப்பொழுதும் எண்ணி வாழ்கின்ற நிலையானது அதனினும் உயர்ந்ததாகும்.

உயர்விலே தனையு ணர்ந்தே
உதவியே செய்தல் வேண்டும்
அயர்விலே பிறரைக் கண்டால்
அதையொழித் திடுதல் வேண்டும்
துயருறும் உயிரைக் கண்டால்
துயரறச் செய்தல் வேண்டும்
பயமிலா மனதும் வேண்டும்
பசியிலா பக்தி வேண்டும். (100)

பொருள் :- உயர்ந்த நிலையிலிருந்தாலும் நாம் யா்ர் என்பதை உணர்ந்து எந்த நிலையிலிருந்தாலும் பிறர்க்கு உதவி செய்ய வேண்டும். வருத்த நிலையில் பிறரைக் கண்டால் அவ்வருத்தத்தைப் போக்க வேண்டியவற்றைச் செய்து வருத்தத்தை ஒழிக்க வேண்டும். பேரின்பமடைவதற்கு உள்ள, உடலை வருத்தும் துன்பங்களுக்குப் பயப்படாத திண்மையான மனம் வேண்டும். பசியினைப் பற்றிச் சிறிதும் எண்ணாத (நிஷ்காம்யமான) சிறந்த பக்தி வேண்டும்.

முற்றிற்று.

